222

222
2-61.

# மன்ஸூர் ஹல்லாஜ்



REGISTRAR OFFICE
1 MA.. 1961

ழ7:332
N57
111400

...தி பதிப்பகம்
...ஊர், திருச்சி

அனல் ஹக்!
(நானே மெய்ப்பொருள்)
என்று கூறிய

•

ஹஸ்ரத்
ஹுஸைன் பின்

# மன்ஸூர் ஹல்லாஜ்

(ரஹ்மத்துல்லாஹி அலைஹி)

ஆசிரியர்:
ஸையித் இப்ராஹீம், எம். ஏ., எல். டி.,
ஜமால் முஹம்மத் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

வளர்மதி பதிப்பகம்
34, இஸ்லாமியாபுரம்,
தென்னூர், ✻ திருச்சிராப்பள்ளி.

விலை ரூ. 1

முதற் பதிப்பு—மார்ச்சு, 19[illegible]

## இதனுள்ளே

1. தோற்றுவாய்
2. ஸூபிகள் தோழமையில்
3. இன்னொரு வண்ணத்திலே
4. ஹஸ்ரத் ஜுனைதுடன் தர்க்கம்
5. ஷுஸ்தர் நகரில்
6. திருமக்காவில்
7. இந்தியா—சீனு பிரயாணம்
8. பக்தாத்—முழக்கம், "அனல் ஹக்"
9. குப்ர் பத்வா
10. கலீபா முக்ததிர் பில்லாஹ்வும் அவரது மந்திரியும்
11. விசாரணை
12. சிறைச்சாலையா? தவச்சாலையா?
13. தூக்கு மேடையிலே
14. பொதுமக்கள்—ஸூபிகள் அபிப்பிராயங்கள்
15. உயர் வசனங்கள்
16. அற்புதங்கள்
17. இறைகாதல்

உரிமைப் பதிவு

# முகவுரை

இந்திய வரலாற்றிலே, நாதிர் ஷாஹ் என்ற ஈரான் பாதுஷா, டில்லி நகரைக் கைப்பற்றியபொழுது, முகலாய சக்கரவர்த்தியாயிருந்த முஹம்மத் ஷாஹ் என்பவர் ஒரு சிறந்த புலவராகவும் இருந்தார். அவர் தயாரித்த காவியங்கள் சிலவற்றைக் கூறும்படி நாதிர் ஷாஹ் அச்சமயம் அவருக்கு வேண்டுகோள் விடுத்தார். உடனே, முகலாயப் பேரரசர்,

> " ஜாக்கிரதை! கண்ணைத்திற! இறைவனிடமிருந்து
> பாடங்கற்றுக்கொள்!
>
> எவ்வாறு எமது தீச்செயல்கள் ஒரு " நாதிர் "
> (அதிசய) உருவாகிவிட்டன!"

என்ற கருத்துள்ள பாரசீகப் பாடலைப் பாடினர். நாதிர் ஷாஹ்வின் சீற்றம் தணிந்தது. முஹம்மத் ஷாஹ்வின் இராஜ்யத்தை அவருக்கே கொடுத்துவிட்டுத் தமது நாட்டிற்குத் திரும்பிவிட்டார்.

"கண்ணைத் திற!" என்றூர் முஹம்மத் ஷாஹ். ஆம்! தற்கால முஸ்லிம்களும் தங்கள் கண்ணைத் திறக்க வேண்டும். தங்களது இஸ்லாமிய பொக்கிஷங்களைப் பல மொழிகளில் எழுதுதல்வேண்டும். உலகினிலே கிறிஸ்தவ வேதநூல் இன்று எழுநூறு மொழிகளில் விநியோகிக்கப்படுகிறது. ஆனால், முஸ்லிம்கள் தங்கள் குர்ஆனையும், தத்துவ நூல்களையும் பிறமொழிகளில் எழுதுதல்வேண்டும். ஐரோப்பியர் அநாகரிக இருட்டில் இருந்தபொழுது, பொதுவாக முஸ்லிம்களும், குறிப்பாக முஸ்லிம் ஸூபிகளும், உலகினுக்கு ஏகதெய்வக் கொள்கை

யையும், தத்துவக் கலையையும், நாகரிகத்தையும் அள்ளி அள்ளிக் கொடுத்தனர். ஆனால், அவர்களது வழிவந்த நாம் சில சடங்குகளை மட்டும் கட்டி அழுதுகொண்டு, இஸ்லாம் மார்க்கத்தின் நற்பெயரை இழிவுபடுத்திக் கொண்டிருந்தோமாயின் உலகம் நம்மையும், நமது செயலின் காரணமாக இஸ்லாம் மார்க்கத்தையும் இழிவாகக் கருதுமல்லவா?

இஸ்லாமிய ஞானாசிரியர்களான ஸூபிகள் இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றி, குர்ஆனுடைய ஆழ்ந்த கருத்துக்களை மக்களுக்கு விளக்கினார்கள். தாம் பெற்ற செல்வத்தை இவ் வையகத்தாரும் பெறவேண்டுமென்று முயன்று மக்களை இறைவன் பக்கம் திருப்பினார்கள். அந்த முயற்சியில் அவர்கள் எத்தனையோ இன்னல்களுக்கும் ஆளானார்கள்.

அத்தகைய பெரியார்களில் ஒருவரான "மன்ஸூர்" என்பவரது வாழ்க்கை வரலாறு இச்சிறு நூலில் சமர்ப்பிக்கப்படுகிறது. அன்பர்கள் படித்துப் பயன் பெறுவாராக!

ஜமால் முஹம்மத் கல்லூரி
திருச்சிராப்பள்ளி
19 ஷாபான் 1376.
22—3—1957

ஸையித் இப்ராஹீம்.

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.*

எப் புகழும் அல்லாஹ்வுக்கே, ஸலவாத்தும், ஸலாமும்
எம் பெருமாஞர் (ஸல்). அவர்கள்மீதும்,
அவர்களது இனமித்திரர்மீதும்
உண்டாவதாக.

★

# மன்ஸூர் ஹல்லாஜ்

*(ரஹ்மத்துல்லாஹி அலைஹி)*

## 1. தோற்றுவாய்

**ஹி**ஜ்ரி மூன்ரும் நூற்ருண்டின் மத்தியிலே, ஈரான் நாட்டிலே, பய்ஸா (Baiza) என்னும் ஊரிலே, மன்ஸூர் என்ற ஒரு மனிதர் இஸ்லாம் மார்க்கத்தை ஒப்புக்கொண்டார். அவர் அவ்வூரிலிருக்கையில் அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ஹுஸைன் என்று பெயரிடப்பட்டது. குழந்தை பிறந்த சிறிது காலத்தில் அதன் பெற்ருேர் ஈரானிலிருந்து இராக் நாட்டிற்கு வந்துவிட்டார்கள்.

குழந்தையின் பெயர் ஹுஸைன். தந்தையின் பெயர் மன்ஸூர். எனவே, மன்ஸூர் உடைய மகன் ஹுஸைன், அதாவது, "ஹுஸைன் பின் மன்ஸூர்" என்பதே மகன் பெயர். ஈரானிலும் அரப்நாட்டிலும் தகப்பனுடைய பெயருடன் மகன் பெயரையும் சேர்த்து அழைப்பது வழக்கம். ஆனல், இந்தக் குழந்தையின் பெயரோ, ஓர் அதிசயமாகவும், வழக்கத்திற்கு மாற்றமாகவும் இருந்தது. தகப்பனர் பெயரும் மகனுக்கே ஆயிற்று. எனவே, மன்ஸூர் என்ற பெயர் மகனுக்கும் வந்தது. அதாவது, மகன் பெயர் தந்தையின் பெயரில் மறைந்து

விட்டது. மகன் பெயர் தந்தையின் பெயரிலே அழிந்து விட்டது. "ஹுஸைன்", அல்லது, "ஹுஸைன் பின் மன்ஸூர்" என்று அழைக்கப்பட வேண்டியவர் "மன்ஸூர்" என்றே அழைக்கப்பட்டார். இவரது வாழ்க்கையின் பிற்காலத்திலே இவர் நடந்துகொண்ட முறைக்கு இஃதொரு முன்னறிக்கைபோலும்!

எனவே, நாமும் ஹுஸைன் என்ற இவரது அசல் பெயரை விட்டுவிட்டு, "மன்ஸூர்" என்றே அழைப்போம்.

ஈரான் நாட்டிலுள்ள ஷூஸ்தர் நகரிலே குழந்தை கல்வி கற்க ஆரம்பித்தது. மன்ஸூர் என்னும் மாணவர் ஸஹல் பின் அப்துல்லாஹ் (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) என்ற சிறந்த ஆசிரியரின் மாணுக்கராஞர். இந்த ஆசிரியரிடம் பதினெட்டு வயதுவரை கல்வி கற்ருர். ஆனால், அக்கல்வி லௌகீக சம்பந்தமான கல்வியேயாகும்.

அறிவுக்கு அப்பாலுள்ள ஆண்டவனை அறிவதற்கு இந்த நூலறிவு பயன்படாது என்றும், மனிதனுடைய ஞான மார்க்கத்திலே ஓர் அளவுக்குமேல் பகுத்தறிவு உறுதுணையாக நிற்காது என்றும் நமது மாணவர் கண்டு கொண்டார்.

நூலேணி விண்ணேற நூற்குப் பருத்தி வைப்பார்
போலே கருவி நன்னூற் போதம் பராபரமே.

(தாயுமானவர்)

உலகநெறியைவிட தவநெறியே மேல் என்று அறிந்தார். போக நெறியானது ஞான நெறியினும் மேலானதல்ல என்றும் கண்டுகொண்டார்.

திட்டிக் கதவு தெரிந்ததடா!
திறவு கோலும் இல்லையடா!

சட்டித் திரையும் கண்டதடா !
கண்ணும் மயங்கி நின்றதடா !
ஒட்டிச் சிறிது நீநானென்று
உரைத்த உரையும் கேட்டதடா !
நட்ட காலம் பின்னையடா !
நான்நீ அற்றுப் போச்சுதடா !

இருளில் ஏகும் மக்களெல்லாம்
இடறி வழியில் வீழாமல்
அருளி அழைத்துச் செல்ல விதிக்கு
அளித்த தீபம் யாதென்றேன் ;
உருளும் வானம் எனை நோக்கி,
" உணர்ந்தும் உணரா உணர்வென்
மருளி ஞானம் உளது " என்ன
மாற்றம் தந்து சென்றதம்மா !

(உமர் கய்யாம்—கவிமணி)

ஈரானிலிருந்து மாணவர் மன்ஸூர் இராக் நாட்டிற்கு வந்த காலத்திலே தஸவ்வுப் (Tasavvuf) என்னும் ஞான மார்க்கக் கலை ஆரம்பித்தது. உயர்வுபெற்ற ஆலிம்களும், தஸவ்வுப் வழியிலே சென்றூர்கள். மன்ஸூரும் இராக் நாட்டிற்கு வந்தபிறகு இயற்கையாகவும், இந்தச் சூழ்நிலை யின் காரணமாகவும், அதில் கவர்ச்சிகொண்டார். ஸூபி களின் தோழமையில் இருக்க ஆரம்பித்தார்.

## 2. ஸூபிகள் தோழமையில்.

அப்பொழுது அவருக்கு வயது பதினெட்டாகி விட்டது. ஒருவாறு பகுத்தறிவைச் செலுத்தி முடிவுகள் கட்டவேண்டிய காலம். சுய உணர்ச்சி, சுய மதிப்பு, சுவா தீனம், முதலியன ததும்பியெழும் பருவம். நான் என்ற உணர்வு நிறையும் காலம். பதினைந்து வயது முதல் இரு பத்தைந்து வயது வரை ஒருவர் எம்முறையில் நடந்து

எந்த சூழ்நிலையில் இருக்கிறாரோ, அத் தன்மையதாகவே, அவரது பிற்கால வாழ்க்கை அமையும் என்று மனநூல் வல்லோரும் கல்வித்துறை மேதைகளும் கூறுகின்றனர். நமது வாலிபர் மன்ஸூர் இப்பொழுது புதியதொரு சூழ்நிலையில் வசிக்கலானார்.

ஸூபி என்றால் ஆத்மஞானி என்று பொருள். தஸவ்வுப் என்ற ஆத்ம ஞானக் கலையைப் பின்பற்றுவோரே ஸூபிகள். உலக வாழ்க்கையை முற்றிலும் விட்டு விட்ட சந்நியாசி என்று பொருளல்ல. இஸ்லாமிய ஸூபிகள் பெரும்பாலும் இல்வாழ்க்கை யுள்ளோராகவே இருந்தனர்.

நபி பெருமானாரவர்களுடன் மக்காவிலிருந்து மதீனாவுக்கு நாடுகடந்து சென்றோரில் சிலர் மிகவும் ஏழைகளாக இருந்தனர். அவர்களுக்கு வீடும், குடும்பமும், செல்வமும் கிடையாது. மஸ்ஜிதே நபவீ என்ற பள்ளிவாசலைச் சேர்ந்த ஒரு திண்ணையில் அவர்கள் சுமார் எழுபது பேர் இரவும் பகலும் வசித்தார்கள். பெருமானாரவர்களும் நாயக தோழர்களும் அவர்களை அழைத்து விருந்து செய்வார்கள். அவர்களுக்கு "திண்ணைத் தோழர்கள்—" அஸ்ஹாப் ஸுப்பா (Ashab Suffa) என்று பெயர். ஸுப்பா-திண்ணை என்ற வார்த்தையிலிருந்து இஸ்லாமிய ஆத்ம ஞானிகளுக்கு ஸூபி என்ற பெயர் வந்ததாகவும் கூறப்படுகின்றது.

இத்தகைய ஞானவான்களும், துறவிகளும் "ஸுப்" (Suff) என்ற கம்பளி போர்த்துக் கொள்வார்கள். அதன் காரணமாகவும், ஸுபி என்ற நாமம் வழங்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

ஸூபிகள்.

உலகத்தவர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உலக சம்பந்தத்தையும், காரண காரியங்களையும் விட்டு மெய்மறந்து இருப்பார். இதுதான் நித்திரை எனப்படுவது. இதற்குமாருக, ஞானவான்களது மனமானது எல்லா வேலைகளிலும் உலக விவகார சம்பந்தமான கேள்விகளை அகற்றிவிடுகிறது. அந்த ஞானிகள் எப்பொழும் இறைவனுடைய சிந்தனையிலேயே மூழ்கி இருப்பார்கள். இது அவர்கள் உலகின் பக்கம் எப்பொழுதும் கண்களை மூடித் தூங்கிக் கொண்டிருப்பது போலாகும்.

"சிறைக் கூடத்திலே விலங்கிட்ட சங்கிலியின் ஓசை கொஞ்சமேனும் கேட்கப்பட மாட்டாது, நான் உலகிலே இருக்கிறேன். எனினும், உலக எண்ணத்தை ஒழிந்திருக்கீறேன்". —*மீர் தர்த் (ரஹ்)*

"உணர்ச்சி இல்லை. புலனறிவு இல்லை. இருதயம் இல்லை. புத்திசித்த மில்லை.

அந்த வாசற்படியிலே, உருகிய சிரசு கிடந்ததைத் தவிர, புத்தி, சித்தம், யாவும் என்னை விட்டு நீங்கிவிட்டன"

—*அமீர் குஸ்ரு (ரஹ்)*

எனவே, உள் அறிவும், உள் அழகுமுடைய மெய்க் காதலர்கள் நமது பார்வைக்கு விழித்தவர்களாகக் காணப் படுவார்கள். என்ருலும், உண்மையில், அவர்கள் தங்களை மறந்து தேக சம்பந்தங்களிலிருந்து விடுதலை பெற்றவர்களாவார்கள்.

மெய்யடியார்கள் தங்களது விருப்பம், பொருத்தம் எல்லாவற்றையும் இறைவனது திருவுளத்திற்காகத் தத்தஞ் செய்து விடுகின்ருர்கள்.

"ஞானியானவர் இரவும் பகலும் உலக காரியங்களை ஒழித்துத் தூங்கிக் கொண்டிருக்கிறார். எழுத்தாளர் கையிலுள்ள எழுதுகோலைப் போல் இறைவனது இயக்கமாகிய கரத்தில் (ஏற்றமும் இறக்கமும்) அனுபவித்துக் கொண்டிருக்கிறார்."
—மஸ்னவீ 1:492.

"சர்வ மனிதர்களின் சிந்தனையின் கடிவாளம் அவனது கரத்திலேயே இருக்கிறது."—அமீர் குஸ்ரூ (ரஹ்)

வஹ்ததுல் உஜூத் (Wahdatul Wujood):—சிருஷ்டிகள் சிருஷ்டி கர்த்தாவின் அருள்வெளித் தோற்றங்கள் என்ற சித்தாந்தை ஞானத்தின் ஜீவன் என்று ஸூபிகள் கருதுகிறார்கள். அதாவது, இந்தக் கொள்கையின் பிரகாரம் அல்லாஹ்வின் எல்லையற்ற தாத் (Self Essence) என்பதை எல்லைப் படுத்தாமல், எதேச்சையாக விடுத்து எல்லாம் வல்லதாகக் கொள்ளத்தக்க கொள்கையாகும். ஆதலால், இறைவனது உள்ளமையின் உன்னதப் பதவிக்கேற்ப இக் கொள்கை மிக உண்மையானது.

வஹ்தத்துஷ் ஷுஹூத் (Wahdat-us-Shuhood) என்ற கொள்கையில், "இறைவன் வேறு, சிருஷ்டிகள் வேறு" என்று பொருள். படைப்புகளில் பல்வேறுபட்ட பதவியைப் பொறுத்தமட்டில் இக்கொள்கை ஒப்புக் கொள்ளக்கூடியதாகும்.

எனவே, இவ்விரண்டு கொள்கைகளும் உண்மையில் நேர்மையானவைதான்.

ஆரம்பகால முஸ்லிம் உம்மத்தார் பூரண ஞான வளர்ச்சிபெற்றார்கள். ஏகத்துவ ஞானத்தின் உண்மை இரகசியங்கள் அவர்களுடைய இருதயங்களில் நன்கு பதிந்திருந்தன, பேரின்ப ஐக்கியத்தின் தன்மைகளை

நன்கு தெரிந்துகொண்டார்கள். அந்த இன்பத்தின் காரணமாக இயம நியமங்களில் ஈடுபட்டு எப்பொழுதும் உழைத்தார்கள். எனவே, அந்த ஞானக்கலை தனது சிகரத்தை எட்டிவிட்டது.

ஆனால், காலஞ் செல்லச்செல்ல, மூடர்களெல்லாம் ஞானவான்களின் வசனங்களில் நாஸ்திகப் பொருள் கொள்ள ஆரம்பித்தார்கள். அதாவது, மேலான, நுட்ப மான ஞானவாக்கியங்களெல்லாம் இந்த மூடர்களாலும், சோம்பேறிகளாலும் இஸ்லாமிய மதக் கொள்கையினின் றும், இயம நியமங்களிலிருந்தும் தப்புவதற்காகவும் உப யோகிக்கப்பட்டன. நாஸ்திகப் பொருள்கொள்ளத் தொடங்கினார்கள். இதனால் பல கேடுகள் விளைந்தன.

பேரின்ப ஐக்கியத்தைப்பெற்ற பூரண ஞானிகளெல் லாம் இறைவனுடைய ஒளி (நூர்) எத்திசையிலும், எவ் விடத்திலும், எவ்வுலகிலும் வியாபித்திருப்பதைக் காண் பார்கள். யோகியாயிருப்பவர், மிக மேலான பனா—Fana— என்னும் தியாக நிலை அடைவார்கள். பிறகு சிறிது கீழே இறங்குவார்கள். வெவ்வேறான பல வஸ்துக்களிலும் அந்த ஒளியைத் தரிசிப்பார்கள். அவ்வாறு தரிசிக்கா தோர் பனா என்ற நிலையில் மட்டும் உள்ளவர்களே யல்லாது, முன்பின் நடக்கும் காரியங்களை அறியாதவர் களாவார்கள்.

"அகப் பார்வையுடைய ஞானக் கண்ணானது ஒளி பெற்றதாக இருந்தால், அது எந்தத் திசையை நோக்கி னாலும் அவனது தோற்றத்தையே காணும்."

—*காஜா மீர் தர்த் (ரஹ்)*

இத்தகைய மகாத்மாக்களுடைய இருதயமாகிய கண்ணாடியானது இறையொளிச் சுடரால் இலங்கிக் கொண்டேயிருக்கும். இதற்காக, அவர்கள், இறைவன்

அல்லாத எல்லாவற்றினின்றும் விலகியிருந்து தங்கள் இருதயங்களைச் சுத்தமாய் வைத்துக்கொள்வார்கள். அவர்களது இருதயம் சுத்தமாக இருக்கும். மனம், ஒளிநிறைந்திருக்கும். சரீர இச்சைகளை முற்றும் துறந்து, வானுலகச் சஞ்சாரத்தில் இருப்பார்கள். அவர்களது ஆன்மாவானது மகோன்னத பாரமார்த்திக நிலையில் இருக்கும்.

"திவ்விய தெய்வலோகத்தின் திறந்த வெளிகளில் நான் எவ்வாறு சஞ்சரிக்க முடியும்? எனது உடலோ பூதப் பொருள்களின் ஆக்கம் என்ற கட்டடத்திற்குள் கட்டுப்பட்டுக் கிடக்கிறதே!" —*காஜா ஹாபிஸ் (ரஹ்)*

"நீ முன்னேறிச்செல்ல முயலும்பொழுது, அமரர்களையும் தாண்டிச் செல்வாய். அன்றி, நீ திரும்பிவிட்டால் வெகு விரைவில் தாழ்ந்த நிலைக்கு வந்துவிடுவாய்."

—*ஷெய்க் ஸஅதி ஷீராஸி (ரஹ்)*

சில சமயங்களிலே உண்மையான இறைகாதலருக்கு ஜோதிநிலை உண்டாகும். அவர்கள் அப்பொழுது அதன் வசப்படுவார்கள். பலவிதமான பரவச லீலைகள் புரிவார்கள். பின்பு அந்த நிலைமை மாறிவிடும். அவர்களுக்கு அத்தகைய நிலையானது மாறிமாறி வரும். அதை ஞானவான்களுடைய பரிபாஷையிலே, ரூஸ் அல்லது வக்த் (சமயம்) என்பார்கள். பேரின்ப மார்க்கத்தில் உள்ளவருக்கே அது சித்தியாகும். அது சித்தியாவதற்கு இறைவனது அருள்வேண்டும். இந்த ஜோதிநிலையே ஞானிகளுடைய இலட்சியம். இதுவே, அவர்களது மெய்யான இன்பத்திற்குக் காரணமும், ஆனந்தக் களிப்பிற்குத் தூண்டுகோலுமாகும்.

ஞானானந்தக்களி நிலைமை, ஞானானந்த சாந்த நிலைமை என்ற இரண்டு நிலைமைகள், மனோவிகாரங்களைத்

தாண்டிச் சென்று சுத்த மெய்ஞ்ஞான நிலை அடைந்தோர்—பலர், அளவுகடந்த காதலினாலும், மெய்யுணர்வினாலும், தம்மை மறந்து பரவச லீலைகள் புரிவார்கள். இது ஞானானந்தக்களி நிலைமையாகும். ஆனால், இன்னும் சிலர் மோன தியானத்திலே அமைதியோடு இருப்பார்கள். இது ஞானானந்த சாந்த நிலை எனப்படும்.

பேரின்பக் காதலர்களெல்லாம் நபிமார்களின் மார்க்கப் போதனைகளை முற்ற முற்றப் பின்பற்றுவார்கள். அதனோடு நில்லாமல், இந்த உலகிலே இறைவனைத் தரிசிக்கும் ஆர்வங்கொண்டு முயற்சி செய்வார்கள். காதல் கடலிலே அவர்கள் அதிக ஆழத்திலே மூழ்கியிருப்பர். இருந்தாலும் இன்னும் முன்னேறிச் செல்வதே அவர்களது குறிக்கோளாக இருக்கும்.

"உனது தரிசனத்தைக் காண்போர் வேறுயாரையும் ஏறிட்டுப் பார்க்கவும் மாட்டார். அவர் காதலாலும் திருப்தி பெறமாட்டார். காதலின் இன்ப வாழ்வினாலும் திருப்தி அடைவதில்லை."

—*ஷெய்க் ஸஅதீ (ரஹ்)*

ஞான மார்க்கத்தில் நடக்கும் மாணவர், அதாவது "ஸுலூக்" என்னும் பேரின்பப் பாதையில் செல்வோர், "ஸாலிக்" எனப்படுவர். ஸூபிகளின் பரிபாஷையில் குருவுக்கு "பீர்" "முர்ஷித்" என்றும், சீடருக்கு "முரீத்" என்றும் கூறப்படுகிறது. அவர்களது இருப்பிடத்திற்கு "கான்கா" என்றும் பெயர். அவர்களது நல்லுறைகள் 'இர்ஷாதாத்' எனப்படும். இறைவனுடைய ஒருமையை "அஹ்தியத்" என்பார்கள்.

பர்த்தர் அஸ் கியால் வ கியாஸ் வ வஹ்ம்

Bartar az khiyal wa khiyaas wa wahm

கருத்திற்கும், (thought) அனுமானத்திற்கும் (guess) கற்பனைக்கும் (imagination) எட்டாததை அடைய முயல்வர் இந்தப் புனித மகான்கள்.

அல்லாஹ், வானங்கள், பூமி (ஆகியவை)களின் பிரகாசமாக இருக்கிருன். அவனுடைய பிரகாசத்திற்கு உதாரணம், விளக்கு இருக்கும் ஒரு மாடத்திற்கு ஒப்பாகும். அவ்விளக்கு ஒரு பளிங்குக் கிண்ணத்தில் இருக்கிறது. அந்தக் கிண்ணமோ முத்தாலாகிய (பிரகாகிக்கும்) ஒரு நட்சத்திரத்தைப்போல், (பிரகாசித்துக்கொண்டு) இருக்கின்றது. (அதில்) பாக்கியம்பெற்ற "ஸைத்தூன்" மரத்தின் எண்ணெய் எரிக்கப்படுகிறது. அது கீழ்நாட்டிலுமல்ல; மேல்நாட்டிலுமல்ல; அந்த எண்ணெய் நெருப்புத் தொடாவிடினும் பிரகாகிக்கவே செய்கிறது.

குர் ஆனிலே, "ஜோதி" என்னும் அத்தியாயத்திலே இறைவனை "ஜோதி" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த ஜோதி மனிதனுடைய உள்ளத்திலே மறைந்திருக்கிறது. ஆண்டவனுல் படைக்கப்பட்ட அடியான், தன்னை அறியும் ஆராய்ச்சியில் ஈடுபடுவானுனுல் அப்பொழுது அவனுக்கு அந்த ஜோதி வெளிப்படும்.

மன் அரப நப்ஸுஹு ப கத் அரப ரப்புஹு
man arafa Nafsuhu Fa Qad Arafa Rabbuhu
தன்னை அறிந்தவன் தன் இரட்சகனை அறிவான்.

தன்னைப்பற்றிய ஆராய்ச்சியில் மூழ்கியோன் அந்த ஆராய்ச்சி செய்து தன்னை அறிந்துகொள்வானுனுல், அதன் மூலமாகத் தன் தலைவனுகிய தெய்வத்தைத் தெரிந்துகொள்வான்.

தான் (நப்ஸ்) என்ருல் என்ன? தன்னை ஆராய்தல் எவ்வாறு? தன்னை அறிதல் எவ்வாறு? இந்த உடலையே

பெரும்பாலான மக்கள் 'தான்' என்கின்றனர். ஆனால், உண்மையில் இந்த உடல் 'தான்' அல்ல. எனினும், அதை 'தான்' என்று சொல்வதில் தவறில்லை. ஏன்? 'தான்' என்பது அந்த உடலுக்குள் இருக்கிறதல்லவா? உடலை விட்டுவிட்டு, உயிர் பிரிந்தபிறகு உடல் அழிந்து போகிறது. உயிர், உடலைவிட்டுப் பிரிந்தபின் அழிவதில்லை. அந்த நிலையில் 'தான்' என்பது உயிரையே குறிப்பிடுகிறது. தான் என்பதை ஆராய்வதில் உடல் நமக்கு உறுதுணையாகின்றது.

உயிர் என்றால் ரூஹ்,—ஆத்மா என்று பொருள். உடலின் உதவியால் உயிரை—ஆத்மாவை—ரூஹை அறிகிறோம். ஆனால், உயிரைக்கொண்டே உடல். உடலைக் கொண்டு உயிர் அல்ல.

மனிதன் தன்னை எவ்வாறு அறிய ஆரம்பிக்கிறான்? இந்த உடலும் இந்த உயிரும் எங்கிருந்து வந்தன? இங்கு அவை செய்யவேண்டிய வேலை என்ன? அவற்றின் முடிவு என்ன? என்பனபோன்ற ஆராய்ச்சியிலே ஈடுபடுகின்றான். உயிர், உடல் இவற்றின் பிறப்பு—ஆரம்பம்—ஒன்றாகவே இருப்பினும், அவற்றின் முடிவு வேறுபாடுள்ளது. மரணம் என்ற முடிவின் பலனாக உடல் மரிக்கின்றது. ஆனால், உயிர் (ஆத்மா—ரூஹ்) ஜீவித்திருக்கிறது. தனது ஆரம்ப நிலைமையையும் தனது உடம்பின் நிலைமையையும் நன்கு ஆராயும்பொழுது, மனிதன் தன்னைத்தானே படைத்துக்கொள்ளவில்லை என்றும், தன்னைப் படைத்த மறைவானதொரு சக்தி இருத்தல் வேண்டுமென்றும் அறிந்துகொள்ளுகிறான். அந்தச் சக்தியைத்தான், "தெய்வம்,"—"கடவுள்,"—"தேவன்,"—"அல்லாஹ்" என்கிறோம்.

ஆத்மாவின் விருத்திக்குக் காரணமாக இருப்பது மனிதனுக்கென்று அருளப்பட்டிருக்கிற தனிப் பேறுன, "அறிவு" என்பதாகும். கல்வியின் பயனுகவும், சூழ்நிலையின் மூலமாகவும் மனிதன் தனது அறிவை விருத்தி செய்துகொள்ளுகிருன். உடலானது உயிரைத் தொடர்ந்திருப்பதுபோல, அறிவும் உயிருடன் தொடர்புகொண்டிருக்கிறது. இந்த அறிவின் மூலமாக உடலைப்பற்றிய விஷயங்களை உயிர் தெரிந்துகொள்ளுகிறது. ஆகவே, உயிர், உடல், அறிவு, இம்மூன்றும் ஒரு பின்னல்போன்று அமைந்திருக்கின்றன. மனிதன் தனது பகுத்தறிவால் சற்குணங்களையும், துர்க்குணங்களையும் அலசிப் பார்த்து சற்குணங்களை மேற்கொண்டு, நேர்வழி நடந்து நற்பதவி பெறுகின்ருன். அறிவின் உதவியால் மனிதன் பல துறைகளிலும் முன்னேற்றப்பாதையில் செல்கின்ருன்.

இந்த அறிவை உபயோகப்படுத்தும் பொறுப்பு (அமானத்) மனிதனிடத்தில்தான் இருக்கிறது. இத்தகைய பொறுப்பிற்கான கணக்கை, இறைவனிடம் கொடுக்கும் பொறுப்பும் மனிதனைச் சார்ந்தது. அறிவின் உதவியால் மனிதன் தன்னை அறிந்து, ஆத்மீக உயர்ச்சி பெற்றுத் தனது ஆத்மாவை அறிந்தபின், பரமாத்மாவை-பரமசக்தியான இறைவனை—அறிகிருன். இந்த அற்புதமான அறிவைப் படைத்த பூரண அறிவான தெய்வம் இருக்கிறது என்று மனிதன் அறிந்துகொள்ளுகிருன்.

ஆனல், இந்த அறிவுக்கும், ஆத்மாவுக்கும் ஓர் எல்லையுண்டு. அறிவால் எல்லாவற்றையும் மனிதன் அறிந்துகொள்ள முடியாது. அவன் அறியவேண்டிய இரகசியங்கள் அநேகம் இருக்கின்றன. மானிட அறிவுக்கு எட்டாத தெய்வ இரகசியங்க்ள் எண்ணிக்கையற்று இருக்கின்றன.

தனது ஆன்மசக்தியால் படைப்புகளின் மீது மனிதன் ஆதிக்கம் செலுத்தலாம் ஆனால், அவற்றைப் படைக்கும் சக்தி அவனுக்கு இல்லை. தன்னையே உண்டாக்கிக் கொள்ளமுடியாத மனிதன் பிறவற்றை எவ்வாறு சிருஷ்ட்டிப்பான்? இதைப்போலவே மரணத்திலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ள மனிதன் அசக்தனாகின்றான். ஆகவே, தானாகவே, தன்னையும் இதர படைப்புகளையும், மனிதன் உண்டாக்கிக்கொள்ளவும் முடியாது. அவற்றை அழித்துவிடவும் முடியாது. எனவே, மானிட சக்தி ஓர் எல்லைக்கு அப்பால் வேலை செய்யமுடியாது என்று அறிகிறோம். பிறப்பு, இறப்பு, படைப்பு, அழிவு, இவையெல்லாம் மறைவானதும் மகத்துவம் பொருந்தியதுமான பரம சக்தியால் உண்டாகின்றது. அந்த சக்தியை தெய்வம் - இறைவன் - அல்லாஹ் என்கிறோம்.

மனிதனுடைய சரீரமானது சிறு உலகமாக அமைந்துள்ளது. உலகத்தைப் போன்ற தனது உடலின் அமைப்பை ஆராய்ந்து மனிதன் தெய்வத்தை அறிகிறான். இதர படைப்புகளையும் ஆராய்ந்து தெய்வம் உண்டென்று மனிதன் தெரிந்து கொள்ளுகிறான்.

ஆனால், தெய்வமோ, தெய்வ சக்தியோ மானிட அமைப்பிலும், அறிவிலும், யூகத்திலும் அடங்கியதல்ல. நாமம், இடம், காலம், அமைப்பு, தோற்றம் முதலியவற்றிற்கெல்லாம் அது புறம்பானது. தெய்வத்தை நேராகக் காண முடியாது. அது, என்றும், எங்கும், பரந்த ஏகாந்த சக்தி. 'உண்டு' என்போருக்கும், "இல்லை" என்போருக்கும் உள்ளிருக்கும் சமத்துவம். உடலில் இருக்கும் உயிருக்குள் உயிராக மனிதனில் கலந்திருக்கிறது.

இத்தகைய ஆராய்ச்சியில் ஈடுபட்டு முதிர்ச்சி அடைந்த புனிதர், பரமார்த்தர், நன்னெறியார், மாதவத்

தோர், அடியார், தொண்டர், பக்தர், தபோதனர், ஞானிகள், சாதுக்கள், மகான்கள், இறைநேசச் செல்வர்களே, "ஸூபிகள்" எனப்படுகின்றனர். ஸூபிகளின் போதனை களும், ஞான மார்க்க விதிகளும் இல்முஸ் ஸபீனு (Ilmus Safeena) என்ற புத்தகப்படிப்பாக வெளியிடப்படமாட்டாது. ஆனால், "இல்முஸ் ஸீனு" என்ற—ஒரு இருதயத்திலிருந்து மற்றொரு இருதயத்திற்கு மாற்றப்படும்—அறிவாகும். பீர் (ஞானாசிரியர்) சொல்வதை முரீத் (மாணுக்கன்) தனது முஜாஹிதா என்ற முயற்சியால் அறிந்துகொள்ளல் வேண்டும்.

நிற்க, ஹஸ்ரத் அபுல் ஹுஸைன் நூரீ, (ரஹ்மத் துல்லாஹி அலைஹி, ஹஸ்ரத் ஜுனைத் பக்தாதீ ரஹ்மத் துல்லாஹி அலைஹி போன்ற) பக்தர்களின் தொடர்பு நமது வாலிபர் மன்ஸூருக்குக் கிடைத்தது. ஸூபிகளுடன் காலங்கழிக்க ஆரம்பித்தார். அக்காலத்தில் பஸ்ரா நகரில் உமர் பின் உஸ்மான் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். மன்ஸூர் அவரிடம் சென்று, பணிவிடை செய்து கொண்டிருந்தார். இந்தத் தொடர்பின் காரணமாக மன்ஸூர் பெற்ற ஒளியானது அகன்று விரிந்து ஓங்கி வளர்ந்தது. ஆன்மீக ஏற்றம் (உரூஜ்) கிடைத்தது.

**திருமணம்**

இக் காலத்திலே, அபூ யஅகூப் என்பவர் மன்ஸூருக்குத் தமது மகளை மணஞ் செய்வித்தார்.

## 3. இன்னொரு வண்ணத்திலே

ஹஸ்ரத் உமர் பின் உஸ்மான், பக்தி மார்க்கத்தில் ஆழ்ந்த அடித்தள முள்ளவர். ஆன்மீகத் துறையில் உயர்வுபெற்றவர். அவருடன் கொண்ட தொடர்பின் பலனுக மன்ஸூர் மாறுபாடடைந்தார். அவரது ஆந்

மீக வேகம் இன்ஞெரு மாற்றம் பெற்றது. தஸவ்வுப் கலை யிலே ஹஸ்ரத் உஸ்மான் அரிய நூல்கள் எழுதியிருந் தார். சாதாரண அறிவுடையோர் அறிந்துகொள்ளமுடி யாத பல இரகசியங்கள் அவற்றில் அடங்கியிருந்தன. எனவே, தாம் எழுதிய நூல்களை பொதுமக்களுக்குத் தெரி யாமல் அவர் மறைத்து வைத்திருந்தார். சிற்றறிவுடை யோருக்கு அவற்றைக் காட்டமாட்டார். ஏன்? ஆத்மீகத் தின் அடித்தளத்தையும் அறியாதார் அந்த ஆழிய நூல் களின் உட்கருத்துக்களை எவ்வாறு அறிவர்? ஆன்ம அறிவும், ஆத்மீகத் துறையிலே அனுபவமும் பெருத மக்களிள் கையிலே அந்தப் புத்தகங்கள் சென்றுவிட்டால், அவர்கள் அவற்றைத் தப்பர்த்தஞ் செய்து, தாங்களும் நேர்வழியிலிருந்து விலகுவதுடன் பிறரையும் கெடுத்து விடுவார்களல்லவா? வாள் பிடிக்கத்தெரியாத பேடியின் கையில் அதைக் கொடுத்துவிட்டால், வாளுக்கும், வாள் பிடித்தோனுக்கும் இழுக்கல்லவா?

*கற்கக் கசடற கற்பவை. கற்றபின்*
*நிற்க அதற்குத் தக*

என்ற மேலாள உண்மையை, சிற்றறிவுடையோரும், அனுபவ ஞான மில்லாதோரும் அறிவரோ?

வெளிப்படையான திறந்த வார்த்தைகளால் இரகசி யத்தை பராசியமாக்கி வெளியிடுதல் பொருத்தமாகாது: இரகசியத்தை வெளியிட்டால் அதன் பலனுகத் தவருன அபிப்பிராயங்கள் உண்டாகி மக்கள் நிலைமை தலைகீழாகப் போய்விடுமல்லவா? "நேசனுடைய பேரின்ப இரகசியம் மறை பொருளாகவே இருப்பது நன்று."—மஸ்னவீ 1 : 175

" இரகசியமானது திரைக்கு வெளியில் வருதல் முறை யன்று, இல்லையெனில், பேரின்ப வெறியால் கட்டும்

பாடின்றிக் கண்டபடியெல்லாம் களிக்கும் ஞானியர் களரியில், " ஒன்றுமில்லை " என்ற சமாசாரமே இராது."

—காஜா ஹாபிஸ் (ரஹ்)

" உனது இஷ்டத்தை (இடைவிடாது) கேள். எனினும், தராதரத்துக்குத் தக்கபடி கேள். ஒரு புல்லின் இதழ் ஒரு பெரிய மலையைச் சுமக்க முடியுமா ? எந்தச் சூரியனால் சர்வ உலகமும் பிரகாசம் பெறுகின்றதோ அதே சூரியன் தனது இருப்பிடத்திலிருந்து நகர்ந்து முன்னே வருமாயின் அது அனைத்தையும் எரித்து நீற்றிவிடும்.

—மஸ்னவீ 1 . 181 182.

எழில்மிகு நற்காட்சியை யான் கண்குளிரக் கண்டு களிக்கிறேன். ஆனால், சேர்க்கை என்பது எனது வரம்பிற்குள் அடங்கியதன்று. ஒரு கவளத்தை விழுங்கிவிடுதல் ஒரு ஈயின் வல்லபம் என்று கருதாதே "–அமீர் குஸ்ரு (ரஹ்)

" விட்டில் பூச்சி எல்லைமீறி விளக்கில் ஒட்டிக்கொள்ள இச்சித்தது. முன்பு அது தண்ணொளியில் உலாவிக்கொண்டிருந்தது. இப்பொழுது வெந்நெருப்பில் கிடந்து வேகின்றது." —அக்பர் இலாஹ்பாதீ (ரஹ்)

" உயிர் உதட்டை எட்டியது. எனினும், எனக்குப் பேச மனம் வரவில்லை. ஏனெனில், காதலின் உண்மை எங்கு வெளிவந்துவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன்."

—மௌலானா ஜாமி (ரஹ்)

நாம் எல்லையைக் கடந்து சென்றால் நெருங்கிய உறவு இறுதியில் கேடு விளைவிக்கும் என்றும், தௌஹீதை அளவுக்குமிஞ்சி விளக்கினால் தீமைக்கே இடமாகும் என்றும் இந்த மேற்கோள்களிலிருந்து, நமக்குப் புலனாகின்றதல்லவா ?

"மக்களோடு வார்த்தையாடுவதிலிருந்து நாங்கள் நாவையும், முகத்தையும் திருப்பிக் கொண்டோம். ஏதேனும், வார்த்தையாட அவசியம் இருக்குமாயின் அது உற்ற தோழரோடு இருக்குமேயன்றி அன்னியரோடு இராது."

—ஷெய்க் ஸஅதீ (ரஹ்)

சிருஷ்டிகள்மீது "(இறைவனது ஜோதி பிரகாசிக்கிறதென்ற) இந்த நுட்பத்தை வெளியிடுவதற்கு எனது காதல் ஆசிக்கின்றது. ஆனால், உனது இருதயமாகிய கண்ணாடி பிரதிபிம்பிக்கும் தன்மை உள்ளதாக இல்லையென்றால் இது எவ்வாறு கைகூடும்?"

—மஸ்னவீ 1:54

"சூரியன் ஆயிரக் கணக்கான பளிங்குக் கண்ணாடிகளில் தோற்றமாகின்றான். ஆயினும், அத்தோற்றம் அவ்வவற்றின் நிறத்திற்குத் தகுந்தபடியே பிரகாசிக்கும்,"

—இராக்கீ (ரஹ்)

"உன்னுடைய முகம் கண்ணாடியின் தெளிவுக்கு ஏற்றவாறே அழகைப் பிரதிபலித்துக் காட்டும். ஆஹ்! எங்கள் இருதயமாகிய கண்ணாடியானது கறையால் மூடப்பட்டிருக்கிறதே!"

—மௌலானா ஜாமீ (ரஹ்)

"புறக்கண் பார்வையால் ஆத்மாவின் நுட்பத்தைப் பார்க்கமுடியாது. ஓர் ஊசிக்கண்ணுக்கு ஈஸாவின் மகிமை எவ்வாறு தெரியும்?"

—ஸாயிப் (ரஹ்)

காதல் என்பது கரை இல்லாத பெருஞ் சமுத்திரம். தங்களுக்குத் தெளிவாகத் தெரிந்துள்ள மிகக் குறுகிய மதபோதனைகளின் சொற்ப நன்மையால் திருப்தியுற்றிருப்போரும், இறைகாதல் என்னும் பெருங்கடலில் மூழ்காதோருமானவர்களிடம் காதலைப்பற்றிய விரிவுரை சொல்லுவதும், காதல் இரகசியங்களை வெளியிடுவதும், குழப்பத்

தில் கொண்டுவந்து விடும். ஞானம் என்பதே இன்ன தென்று அறியாத உதவாக்கரைகளுக்கு ஏதேனும் சொல்ல லாகாது. அவர்களுக்கு இந்தத் துறையில் பழக்கமே இல்லையாதலின் சொல்வோருக்கும் கேட்போருக்கும் கேடு விளையும்.

"எவன் விழித்திருக்கவில்லையோ, அவனிடம் இரவின் நீளத்தையும் காதலர்களின் அவல நிலைமையையும் சொல்லக்கூடாது."
— *ஷெய்க் ஸஅதீ (ரஹ்)*

"மிகச் சுவையுள்ள அத்திப்பழமானது (அதை ஜீர ணிக்கச் சக்தியற்ற, கீழ் ஜாதிப் பறவைகளுக்கு ஆகாரமாக முடியாது. அதைப்போலவே, சத்திய போதனைகளைக் காதில் வாங்கிக் கொள்ளும் திறமை எல்லா மக்களிடமும் இராது."
— *மஸ்னவீ* 1:26

"(எங்கள்) பேரொலியிலும் சிற்றொலியிலும் ஒரு மர்மம் (மறைந்து) இருக்கிறது. அதை வெளிப்படையாக நான் சொல்லிவிட்டால், உலகினையே தலைகீழாகச் செய் வோன் ஆவேன்."
— *மஸ்னவீ* 1:35

"தர்தே! அன்பின் இரகசியத்தை நீ யாரிடம் இரகசிய மாகச் சொல்வாய்? எங்கும் நிந்தை அல்லது கண்டனமே காணப்படுகிறது."
— *மீர் தர்த் (ரஹ்)*

"நமது வாலிபர்—மன்ஸூர்—அந்தப் புத்தகங்களை எப் படியோ பார்த்துவிட்டார்! அவை அவர் கையில் அகப் பட்டன! வெகு கவனத்துடன் வாசித்தார்! ஆராய்ந்தார்! அறிந்தார்! அவரது மனம் மாறியது! மாற்றம் ஏற்பட்டது! ஆழ்ந்த அனுபவமுள்ள ஆன்ம அறிவின் இரகசியங்களை பொதுமக்களிடம் ஸூஃபிகள் கூறமாட்டார்கள். ஆனால், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே" என்று நினைத்து, மன்ஸூர் பொதுப் பாட்டைகளிலும், கடைத்தெருவிலும் நின்றுகொண்டு, அவற்றைப் பொதுமக்களுக்குப் பகிரங்க மாக விளம்பரப்படுத்த ஆரம்பித்தார்! அவரவர் அறிவுக் கேற்ற முறையில்தானே ஒவ்வொருவரும் எந்த விஷயத் தையும் அறிந்துகொள்வர். அதன் உட்பொருளையும், மெய்ப் பொருளையும் அறிவதே மேலான முறையென்று அறிவிலிகள் அறிவார்களா? புறத்தோற்றத்தையும் தளவரிசை அறிவையும் விரும்பும் மக்கள் அகப்பொருளை அறியமாட்டார்கள் அல்லவா?

ஸூபிகளோ உலக இச்சைகளை நீக்கி, பகிரங்கத்தை விட்டு, அந்தரங்கத்தை அறிந்தவர்கள். "அல்லாஹ்வே வானங்களினுடையவும் பூமியினுடையவும் ஜோதி" என்று தெரிந்தவர்கள்.

"உங்கள் ஆத்மாக்களில் அடையாளங்கள் இருக் கின்றன. நீங்கள் பார்ப்பதில்லை" என்று குர்ஆன் கூறு கிறது. (குர்ஆன் 51 : 21. லாரியாத்)

"உங்கள் உதடுகளை மூடுங்கள். உங்கள் கண்களை மூடுங்கள். உங்கள் காதுகளை மூடுங்கள். நீங்கள் ஆண்ட வனது (ஸிர்) இரகசியத்தைப் பார்க்கவில்லையானல் நம்மைப் பார்த்துச் சிரியுங்கள்" என்று மௌலானு ஜலா லுத்தீன் ரூமி, தமது மஸ்னவியில் கூறுகிருர்.

> தில்கே ஆயினேமே ஹை தஸ்வீரே யார்
> ஜப் ஜரா கர்தன் ஜ்ஹு்கா தேக்லே

"நேசனுடைய சித்திரம் இருதயத்தின் கண்ணுடியிலே பதிக்கப்பட்டிருக்கிறது. உன் கழுத்தை நீ கொஞ்சம்

சாய்க்கும்பொழுது அங்கே அவனை நீ பார்க்கலாம்" என்கிறார் ஓர் உர்து கவிஞர்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

என்ற உண்மையை அனுபவமுறையில் அறிந்தோர். ஆலிலையில் நீர்த்துளி போன்று உலகத்துடன் தொடர்பு கொண்டவர்கள். இகலோகப்-பரலோகப் பலன் கருதாமல் இறைநேசச் செல்வர்களாக இருப்பவர்கள். வானம் இடிந்து விழுந்திடினும், தங்கள் வைராக்கியத்தை விடாதவர்கள். ஆதியானவனும், அந்தமானவனும், பகிரங்கமானவனும், அந்தரங்கமானவனுமான அல்லாஹ்வையே அல்லும் பகலும் நினைவில் கொள்வர். ஒரு பொருளோடு அதன் நிழல் எப்பொழுதும் தொடர்ந்து இருத்தல் போன்று, இறை காதலில் மூழ்கியோர் இறைவனுடைய நிழல்போன்று இருப்பர். நமது ஊனக் கண்களுக்கு அவர்கள் இறந்தோராகத் தோன்றினாலும், உண்மையில் அவர்கள் பரவெளியிலே-பரமானந்தத்திலே-உயிருடன் இருப்பர்.

வான லோகங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாத பொறுப்பை—அமானத்தை—இந்த மனிதன் (இன்ஸான்) ஏற்றுக்கொண்டான் என்பதையும், "இன்ஸான்" என்னும் பதத்திற்கு "அய்ன் ஸான்"—கண் போன்றது—என்று பொருள் என்பதையும், "மனிதனே உலகினுடைய கண்" என்றும், இந்தக் கண்ணின் மூலமாக இறைவன் தனது செயல்களைப் பார்க்கிறான் என்றும் அறிந்தவர்கள் ஞான மார்க்கம் (உரூஜ்) என்ற ஏணியில் ஏறுவார்கள். இறை காதல் (இஷ்க்) என்று மதுவை அள்ளி அள்ளிக் குடித்து இன்புறுவார்கள்.

வ ஹுவ மஅகும் அய்ன மா குன்தும்—நீங்கள் எங்கு இருப்பினும் அவன் உங்களுடன் இருக்கிறான்—(குர்ஆன் 57 : 4).

என்ற திருமறை வசனத்தின் உண்மையை உணர்ந்தவர்கள். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் ஒன்றுபட்டு இறைவனையே வணங்குவார்கள். இறைவனல்லாத வஸ்துக்களில் கவனம் செலுத்தமாட்டார்கள். மண்ணாளும் மன்னர்கள் ஆயுதந்தரித்து யுத்தஞ்செய்ய வந்தாலும், அத்தகைய அடியார்களது உள்ளத்திலே அச்ச அலைகள் மோதி அல்லற்படமாட்டார்கள். பரிபூரணப் பராபர வஸ்துவாகிய ஏக தெய்வத்தின் பேரின்பக் காதலிலே காலம் கழிப்பார்கள்.

இன்னல்லாஹ லா யக்பா அலைஹி ஷய்வுன் பில் அர்ளி வ லா பிஸ்ஸமாயி-நிச்சயமாக அல்லாஹ்வுக்கு மறைவான பொருள் ஒன்றும் பூமியிலுமில்லை; வானத்திலுமில்லை. (குர்ஆன் 3:4) என்ற இறை வசனத்தை மறக்கமாட்டார்கள். உணர்வுக்கு எட்டாத அல்லாஹ்வின் அருட்கொடையை உன்னி உன்னிச் சிந்திப்பார்கள். நாயனுக்கு நன்றி செலுத்தி ஸ்தோத்திரம் செய்வார்கள். படிக்கும்படி நடக்கப் படிக்காத லோபிகளல்லர். அஞ்ஞானத்தின் ஆக்ரமிப்பை மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகள் தோறும் செல்லும்படி விட்டுவிடமாட்டார்கள். உலக சுகங்களைப் பற்ற மாட்டார்கள். அண்டியோருக்கு ஆனந்தம் அளிப்பவனாகிய அல்லாஹ்வையே அண்டுவார்கள். அவனையே துதித்து, அவனது அன்பழைப்பையே அகப்பார்வையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மும்மலங்களையும் கடந்த முனிவர்களான அவர்களது ஒளி நிறைந்த உள்ளத்திலிருந்து, சிந்தைக்கினிய செவிக்

கினிய எண்ணங்களே உதிக்கும். அவர்களது வார்த்தைகள் உலக மக்களின் உள்ளங்களிலே, அகலாத ஆனந்தத்தை உண்டாக்கும். அவர்களது ஒவ்வொரு மூச்சும் இறைவனது நினைவாகவே இருக்கும். அல்லாஹ்வின் வழிபாட்டில் அல்லாமல், அவலமாக்கப்பட்ட தங்களது வாழ்நாட்களை நினைத்து நினைத்து, மனம் நொந்து கண்ணீர் வடித்து வருந்துவார்கள். பரலோக வாழ்க்கையை இகலோக வாழ்விற்குப் பிரதியாக விற்கமாட்டார்கள். மாயையிலே மயங்கிவிடாமல், மறு உலக சிந்தனையில் மயக்கம் கொள்வார்கள். ஆழித்துரும்பென அஞ்ஞானத்திலே, அங்கும் இங்கும் எங்கும் அலைந்து திரியமாட்டார்கள்.

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை

என்றபடி நிலையில்லாதவற்றையெல்லாம் இழிவாகவே கருதுவார்கள். தங்கள் மனதைப் புலன்களில் ஓடவிடாமல் தடுத்து அதை அல்லாஹ்வில் உறங்கும்படி செய்வார்கள். அல்லும் பகலும் மாறி மாறி வரும் அற்ப இன்பத்தை இச்சித்து அலையமாட்டார்கள். வீண் ஆசையில் மூழ்கி வெதும்பமாட்டார்கள். மாயா உலகை நம்பி மருட்சி அடையமாட்டார்கள். பொய்த் தோற்றமான போக பாக்கியங்களை இச்சிக்கமாட்டார்கள். காமக் குரோதங்களைக் கட்டுப்படுத்துவார்கள். பேராசை என்னும் பெரும்புயலில் அகப்படாதவர்கள்; கற்றதையும் கேட்டதையும் அவலமாக்கமாட்டார்கள். உபயோகமற்ற உலக ஆசாபாசங்களில் உறங்கிவிடமாட்டார்கள். ஜாக்ரம் என்ற விழிப்பிலும், சொப்பனம் என்ற நித்திரையிலும் ஆனந்தத்துடன் அகமகிழ்ந்து இருப்பார்கள். நரகை நீக்கிடும் நல்வழி அறிந்தவர்கள். பஞ்ச பூதங்களால்

பாதிக்கப்படாத பரிசுத்த ஆத்மா உடையவர்கள். ஒன்றை விட்டு மற்ருென்றைப் பற்றி உழலாதவர்கள். ஆபத்தில் அழைப்போருக்கு அபயம் அளித்து அமிழ்த அன்பினை ஊட்டும் அல்லாஹ்வையே நேசிப்பவர்கள்.

இன்னீ கரீபுன்: உஜிபு தஅவதத் தாயி இதா தஆனி—நிச்சயமாகவே நான் சமீபத்தில் இருக்கிறேன். என்னை அழைப்பவனுடைய அழைப்பிற்கு நான் மறு மொழி சொல்லுகிறேன். (குர்ஆன் 2 : 186)

என்ற இறைமறையை மறக்காத மகாஞானிகள்.

நன்ருன ஆதி அநாதியை, நித்தனை, நாயகனை,
ஒன்ருன ஞான விளக்கான உத்தம வேரொளியாய்
நின்ருனை, எங்கு நிரம்பிய ஹக்கனை, நிச்சயமாய்க்
கண்டா லொழியத் தெளியாது சிந்தைக் கலக்கங்களே.

என்று தற்கலை மெய்ஞ்ஞான சொரூபியாகிய பீர் முஹம்மத் அவ்லியா தமது ஞானமணிமாலையில் கூறு வதைக் காண்க.

அஞ்ஞானமாகிய இருளிலே மூழ்கி அமிழ்ந்திருப்பதை விட்டு, நிவிர்த்தியாகிப் பரிபக்குவம் அடைந்த ஞானவான் களுடைய இருதய கமலங்களுக்கு இன்பமாகத் தோன்றுவ தெல்லாம் இறைவனை யன்றி மற்ருென்றைத் திரும்பிப் பாராத அவனது தரிசனமாகும்.

ஆனால், பற்றுக்களைக் களைந்து பரகதி அளிக்கும் பரமனை, மன்ஸூர் ஹல்லாஜ் வெளியிட்ட பேரின்பத் துறையை சேர்ந்த பரம இரகசியங்களை இந்தப் பாமர மக் கள் அறிவரோ? இறைவனது இன்ப வெள்ளத்தை மாசு படிந்த மனத்தவர் மறந்துவிடுவார்களல்லவா? சரீர சுகத்தை விரும்பும் அக்கிரமக்காரர்கள், ஆன்ம சுகத்தை யும் அநித்திய சுகத்தையும் விரும்புவார்களா? பேதை

மதியில் பெரிதும் மகிழ்வுறும் பித்தர் பாதாளத்தை நோக்கியே செல்வார்களல்லவா? 'மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற மூன்று ஆசையுள்ளோரது மனம் மருட்சியில்தானே இருக்கும்? அல்லாஹு ஹக்—அல்லாஹ்வே உண்மை என்பதை அறியார். உண்மையே! அருளே! உள்ளன்பே! சுகமே! என்று இறைவனை அழைக்க அறியாதார். உற்ற துணையாக வந்து ஒளிவீசி, உன்னத ஸ்தானத்தில் உயர்த்திவைக்கும் உத்தமரைப் போற்றத் தெரியாதார்.

இன்ன அக்ரமகும் இந்தல்லாஹி அத்காகும்—உங்களில் (முத்தகீ) பயபக்தியுடையோரே, நிச்சயமாக, அல்லாஹ்விடம் உயர்வுக்கு உரியோர். (குர்ஆன் 49:13. அல்ஹுஜுராத்) என்ற உண்மையை அறியாதவர். உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய் என்று போட்டி போட்டுக்கொண்டு நல்லோரைப் பழிப்பவர்கள், தபோதனரைத் தூற்றுபவர்கள் ஊனமதியில் உழன்று கொண்டிருப்பார்கள். இறைவனது திருவுளப் பொருத்தத்தில் இணங்கி இருக்கத் தெரியாதவர்கள் பக்குவப்படாத பாவிகள். முன்னேற்ற மடையாத மூடர்கள். அறிவு இழந்து அடங்காப் பிடாரிகளாகி அடாத செயல் புரிவோர். பிறர் வாழப் பொருத ஆற்றாமைக்காரர்கள். மக்கி மடிந்த மனமுடையோர். அகத்தூய்மையற்ற அசடர்கள்; கிணற்றுத் தவளைகள்: செக்கு இழுக்கும் மாடுகள். அடியாரை, அன்பரை, இறைநேசச் செல்வரை துன்புறுத்தி, ஆனந்த மடையும் அசடர்கள். உள்ளறிவில்லாத, உள்ளொளியற்ற உபயோகமற்றவர்கள். உள்ளத்திலே கள்ளமும், உதட்டிலே வெல்லமும் உள்ளவர்கள். உள்ளச்ச மில்லாதவர்கள். உலக டம்பங்களில் உழலுகிறவர்கள்.

காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணம் தோன்றாத தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்.

என்றபடி, காய்தல், உவத்தல் இன்றி ஆராயுந் திறனால் நடுநிலைமை காணும் வலிமை, அந்த மக்களுக்கு இல்லை. புறப்பொருளையும் நன்றாக அறிந்து கொள்ள முடியாத அவர்கள், அகப்பொருளை அறியாமல் இருத்தல் ஓர் ஆச்சரியமா?

மன்ஸூர் வெளிப்படுத்திய இரகசியங்களை நன்கு ஆராய்ந்து அறிய பொதுமக்கள் சக்தியற்றிருந்தார்கள். எனவே, மன்ஸூர் கூறுவது தாங்கள் வழக்கமாகக் கேட்ட விஷயங்கள் அல்ல என்றும், அவரது கூற்றுகளெல்லாம் இஸ்லாமிற்குப் புறம்பானவை என்றும், எனவே, அவரை ஒதுக்கித் தள்ளவேண்டுமென்றும் முடிவு செய்தார்கள். அவரை வெறுத்தார்கள், பகைத்தார்கள்.

ஹஸ்ரத் உமர் பின் உஸ்மானையும் பகைத்தார்கள். எங்கும் எதிர்ப்பு ஏற்பட்டது. இதை அறிந்த ஹஸ்ரத் உமர் பின் உஸ்மான் ஆச்சரியப்பட்டார். உண்மையிலே, மன்ஸூருக்கு விபரீதமான விஷயங்களை அப்பெரியார் கற்பிக்கவில்லை. அவர் செய்யாத ஒரு செயலை அவர்மீது சுமத்தி, அவரைக் குற்றவாளியாக்கினால் அவர் என்ன செய்வார்? அப்பெரியாரிடம் தொடர்புகொண்ட மன்ஸூரே அவருக்குத் தெரியாமல் இவ்வாறு பொதுமக்களிடம் பேச ஆரம்பித்தார்: ஹஸ்ரத் உமர் பின் உஸ்மான் மனம் நொந்தார். மன்ஸூருடைய அடாத செயல்கள் அவருக்குப் பிடிக்கவில்லை. எச்சரிக்கை செய்தார். பயனில்லை. இறுதியாகத் தம்மிடம் வரக்கூடாதென்று மன்ஸூரைத் தடுத்துவிட்டார்.

## 4. ஹஸ்ரத் ஜுனைதுடன் தர்க்கம்

அன்றுமுதல், அப்பெரியாருடன் தொடர்புகொள்ளும் பாக்கியத்தை மன்ஸூர் இழந்தார். இனிமேல், அங்கிருக்க அவர் விரும்பவில்லை. எனவே, அங்கிருந்து பக்தாத் நகருக்கு வந்தார். பக்தாத் நகரிலே, ஹஸ்ரத் ஜுனைத் பக்தாதீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி இருந்தார். ஆகவே, மன்ஸூர் அப்பெரியாரிடம் சென்றார். அவருடன் தொடர்புகொண்டு, அவரது மாணாக்கர் குழுவில் சேர்ந்துகொண்டார்.

ஹஸ்ரத் ஜுனைத் என்னும் பெரியார் ஞானமார்க்கத்திலே "குதுப்" என்னும் உயர்வு பெற்றவர். அகமியங்களுக்கு அதிபதி—பாதுஷாஹ் ஹகீகத்-என்றும், ஞான மார்க்க மன்னர்—ஸுல்தானுத் தரீகத்—என்றும் அழைக்கப்பட்டவர். சரியையிலும் (ஷரீஅத்), யோகத்திலும் (ஹகீகத்) மேலான ஸ்தானம் பெற்றவர். பேரின்பக் காதலிலும் (இஷ்க்), துறவிலும் (ஜுஹ்த்) ஒப்பில்லாதவர். இந்த ஞானாசிரியர் பல கிரந்தங்கள் எழுதியிருக்கிறார். இப்பெரியார் அப்பொழுது அப்பாஸி கலீபாக்களின் தலைநகராயிருந்த பக்தாத் நகரிலே தம்மிடம் ஞானோபதேசம் பெற்ற பலருடன் இருந்தார்.

செய்தக்க வல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

செய்யத் தகாதவற்றை சூழ்நிலை அறியாமல் செய்தோமாயின் கேடு நிகழலாம். இதைப்போலவே, செய்து முடிக்க வேண்டியவற்றைச் செய்யாமல் விட்டுவிட்டாலும் நன்மையாகாது. பாத்திரமறிந்துதானே பிச்சையிட வேண்டும். வட்டமான துவாரத்தில் சதுரமான ஆப்பு நுழையுமா ?

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

நல்ல பலனை உண்டாக்கும் சொல்லையே சொல்லல் வேண்டும். ஆனால், நல்ல பலன் அளிக்காத சொல்லைச் சொல்லவேகூடாது. பொதுமக்களிடம் கூறி அவர்களுக்குப் பயன்படாமற்போன சொற்களை பக்தாத் நகர் சென்ற பிறகும், அந்த நகரத்துப் பொதுமக்களிடம். மன்ஸூர் வெளிப்படையாகக் கூற ஆரம்பித்துவிட்டார்!

ஒருநாள் ஹஸ்ரத் ஜுனைத் பக்தாதீயிடம் மன்ஸூர் பல கேள்விகள் கேட்டார். அவரும் மறுமொழி கூற ஆரம்பித்தார். படிப்படியாக இருவருக்கிடையிலே சொற்போர் அதிகரித்துக்கொண்டே போயிற்று.

ஹஸ்ரத் ஜுனைத்:—காதற் பாதையிலே நீர் இவ்வாறு கூறுவது ஷரீஅத்திற்கு விரோதமானது. நமது நபிபெருமானார் சென்ற வழியில் செல்வீராக. எல்லோரும் நபிவழியில் சென்றார்களல்லவா! நீரும் அவ்வாறே செல்லல் வேண்டும்!

ஹஸ்ரத் மன்ஸூர்:—எம்பிரான் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய இரகசியத்தை மக்கள்—பாமர மக்கள்—எவ்வாறு அறிவர்?

"மன் அரானி!" "லீ மஅ அல்லாஹ்!" என்று எம்பிரான் அருளிய இரகசியத்தை அறியமாட்டீர்களா?

"நஹ்னு அக்ரபு இலைஹி மின் ஹப்லில் வரீத்—உங்கள் உயிர் நரம்பைவிட நாம் உங்கள் சமீபத்தில் இருக்கிறோம்—(குர்ஆன் 50 : 16) என்று இறைவன் திருமறையில் கூறிய வசனத்தின் பொருள் உங்களுக்கெல்லாம் விளங்கவில்லையா? தான்—நான் (Self) என்பதில்

மக்கள் மயங்கிக் கிடக்கிறார்கள். தவ்ஹீதின் இரகசியத்தை அறியவேண்டாமா?

ஹஸ்ரத் ஜுனைத்:—மன்ஸுரே! உமது இரத்தத்தால் ஒரு மரத்தின் நுனி சிவப்பாகும் நாள் வெகுசமீபத்தில் இருக்கிறது.

ஹஸ்ரத் மன்ஸுர்:—(வெகு ஆவேசத்துடன்) ஆம்! என் இரத்தத்தால் கழுமரத்திலே வர்ணம் பூசப்படும்!—ஆனால், நீங்கள் அந்த நிகழ்ச்சிக்கு முன்னரே, உங்களுடைய ஸுபி ஆடைகளை நீக்கிவிட்டு, மௌல்வியுடைய ஆடையை அணிந்துகொள்ள நேரிடும்!

இருவரது தீர்க்கதரிசனங்களும் அப்பால் ஒருகாலத்திலே மெய்யாயின.

## 5. ஷுஸ்தர் நகரிலே

இவ்வாறு, ஹஸ்ரத் ஜுனைத் பக்தாதீயுடன் மன்ஸுர் தர்க்கஞ் செய்தபிறகு பக்தாத் நகரிலிருந்தும் வெளியேறினார். அங்கிருந்து ஈரானிலுள்ள ஷுஸ்தர் என்னும் நகருக்குச் சென்றார். சென்றவுடன் அங்கொரு மாறுதல். பழைய வழக்கத்தை விட்டுவிட்டார். ஓர் ஆலிம்போலவே அமைதியுடன் வாழ்க்கை நடத்த ஆரம்பித்தார். அவரை மக்கள் விரும்பினார்கள். மதித்தார்கள். பின்பற்றினார்கள். இவ்வாறு சிலகாலம் சென்றது. ஆனால், அதன்பிறகு திடீரென்று ஆவேசம் பிறந்தது.

உடனே, பிரயாண வாழ்க்கையை மேற்கொண்டார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பல இடங்களுக்குச் சென்றார். வெகுதூரம் சென்றார். வழியிலே, எழுத்து மூலமாகவும், சொற்பொழிவுகள் மூலமாகவும், மக்களுக்கு நல்லுபதேசஞ் செய்தார். சென்றவிடமெல்

லாம் மக்களுக்கு நேர்வழியில் நடக்கும் நல்ல வழிகாட்டியாக அமைந்தார். இறுதியாக, ஈரான் நாட்டிற்கு வடக்கே சென்றார். குராஸான் மாகாணத்திலும் ஜைஹூனின் (ஆக்ஸஸ்) நதிக்கு வடபாலுள்ள மாவராவுன்னஹ்ர் மாகாணத்திலும், தெற்கில் ஸீஸ்தான், பாரஸ் (Faras), கிர்மான், பஸ்ரா முதலிய மாகாணங்களிலும் சிலகாலம் கழித்தார்.

## 6. திரு மக்கா நகரில்

இவ்வாறு இங்கும், அங்கும், எங்கும் பொங்கும் புகழுடன் சஞ்சாரஞ்செய்து இறுதியாக மக்கா நகர் வந்து சேர்ந்தார். இந்தப் பிரயாணத்திலே நானூறு ஸூபிகள் அவருடன் இருந்தார்கள். அவரைப் பின்பற்றுவோர் எண்ணிலடங்காதவர்கள்.

மன்ஸூர் மக்கா நகருக்கு வந்தார், ஹஜ் என்னும் கடமையை முடித்தார். முடிந்தவுடன் தம்முடனிருந்தோர் அனைவரையும் அனுப்பிவிட்டார். தனிமையாக மக்காவில் தங்கினார். இரவும் பகலும் இறைவணக்கத்தில் ஈடுபட்டார். வெகு கடினமான வணக்கங்கள் செய்தார். உடலை உடலென்று பாராமல் தியான மார்க்கத்திலே துன்பங்கள் பல சகித்தார். ஆரம்பத்திலிருந்தே, மன்ஸூர் பக்தித் துறையிலே பழகியவர். ஆண்டவனைத் துதிப்பதிலே இணையிலாத இன்பம் கண்டவர். இறையச்சம் நிறைந்தவர். பிரார்த்தனை புரிவதில் பெரும்புகழ் படைத்தவர். ஆன்மீக மார்க்கத்திலே அரும்பாடு பட்டவர். சலியாமல் உழைத்தார். சாதாரணமாக, தினந்தோறும் நானூறு ரக்அத் தொழுகை தொழுவார். ஆனால், மக்காவிலோ அவரது வணக்க வழிபாடுகள் அளவுகடந்து விட்டன. அவர் சகித்த துன்பங்களும், எடுத்துக்கொண்ட முயற்சிகளும் கணக்கில் அடங்காதவை. அதைக் கேட்டாலே

நமது உள்ளம் நடுங்குகிறது! உடம்பு சிலிர்க்கிறது! மயிர்க்கால்கள் துடிக்கின்றன!

உடல் குழைந்தது. எலும்புகள் நெக்குருகின. விண் மாரி போலக் கண்மாரி பெய்தது. ஐம்பொறிகளை அடக்கினர். இரவு பகலென்று கருதாமல், இறையன்பிலே—தெய்வீகக் காதலிலே—கரைந்து கரைந்து உருகினர். விழிநீர் பெருக்கினர். உடலை வாட்டினர். உயிரை வதைத்தார். சருகாய் வாடினர். மண்ணுளார் உறங்கினலும், விண்ணுளார் உறங்கினலும் இறை காதல் நிறைந்த மன்ஸூரின் கண்ணே உறங்கவில்லை. சொல்லுக் கடங்காத சுகப்பொருளை, அறிவுக்கு அப்பாற்பட்ட அகப்பொருளை, அல்லும் பகலும் சிந்தையினிலே செலுத்தி, ஆன்ம சாந்தியுடன் முத்திப்பேறு அடையும் ஞான மார்க்கத்திலே முனைந்து நின்றார். தன்னுணர்ச்சியற்றும், தன் செயல் அற்ற விடத்தும் இறைவனை அறிய முயன்றார். உயிர் உணர்ச்சியால் இறைவனைக் காணமுடியாதென்றும் உணர்ந்தார்.

ஒரு நாளல்ல, ஒரு வாரமல்ல, ஒரு மாதமல்ல ஓர் ஆண்டு முழுதும் உடலில் ஆடை போர்த்துக்கொள்ளாமல் கஅபாவின் முன் நின்றுகொண்டிருந்தார். உடல் நடுங்கும் குளிரிலும், உடலை உருக்கும் அரப் நாட்டுக் கடுமையான வெயிலிலும் நின்றார். தோல் உரிந்தது. அழலில் இட்ட மெழுகுபோன்று அவரது கொழுப்பு உருகியது. ஒரு நாளில் ஒரு தடவை அவருக்கு ஒரு ரொட்டியும் ஒரு கூஜா தண்ணீரும் ஆகாயத்திலிருந்து வரும். இதை அவர் தமது நோன்பு திறப்பதற்காக வைத்துக்கொள்வார். இவ்வாறு ஓர் ஆண்டு முடிந்தது, அடுத்த ஹஜ் வந்தது. அந்த ஹஜ்ஜையும் செய்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டார்.

# 7. இந்தியா — சீனு பிரயாணம்

மறுபடியும் தேச சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தார். இந்தியாவுக்குச் சென்ருர். சீனு நாட்டுக்குச் சென்ருர். சீன நாட்டிலே இஸ்லாமியப் பிரசாரஞ் செய்தார். சீனுவிலிருந்து திரும்பி பக்தாத், பஸ்ரா நகரங்கள் வழியாக மறுபடியும் மக்காவுக்கே வந்தார்.

மக்காவில் இரண்டாண்டுகள் இருந்தார். மறுபடியும் ஒரு மனப்புரட்சி. மறுமுறையும் ஒரு வேறுபாடு.

வெகு நாட்களாக அவரிடம் மறைந்திருந்த உள்ளக் கிளர்ச்சி, ஆன்ம உணர்ச்சி மறுபடியும் பொங்கி எழுந்தது. பழைய எண்ணங்கள் உருவெடுத்தன. பழைய இதயத் துடிப்புகள் தோன்றின. இரும்பைக் காந்தம் இழுக்கின்ற வாறு தெய்வீகக் காதல் அவரை இழுத்தது. நெருப்பி விட்ட இரும்பு நெருப்பின் குணம் பெறுவதைப் போன்று மன்ஸூர் இறைகாதலில் மூழ்கி 'தான்' என்பதை மறந்தார். உள்ளக்கருத்தால் உவந்து இறைவனுடன் உறவு கொண்டார். சில சமயம் தன்னுணர்ச்சி இழந்து நின்ருர். இறைவனது வண்ணக்கடலிலே (சிப்கதுல்லாஹ்) மூழ்கினுர். அதிலே இன்பம் கண்டார். அந்தப் போதையில், பைத்தியத்தில் மெய்மறந்தார். தான் என்பதை மறந்த நிலை வந்தது. இறைவனைப்பற்றிய பைத்தியம் பிடித்து விட்டது. அது ஒன்றில்தான் இன்பம் காணப்பட்டது.

உள்ளுள் உயிராய் ஊறைந்த உனைத் தொழவே
பள்ளி யறையேன் பகராய் பராபரமே!

நானே நெருப்பாறு நடக்குமயிர்ப் பாலமும்யான்
தானே எனும்அறிவைத் தாராய் பராபரமே!

செல்லு மளவும் செலுத்துகின்ற சிந்தையோர்க்கு
அல்லும் பகலும் அறுமையா நிராமயமே!

தேகாபி மானத் திரைகடந்த தேசிகர்க்கு
போகங்கள் எங்கே முயிலும் நிராமயமே!

பாகாய்க் கசிந்துருகும் பரம பதத்திளர்க்குத்.
தேகாபி மானமெல்லாம் தீயும் நிராமயமே!

தேனோடு பாகாய் திரண்டமுத மென்னவுமென்
ஊனோடு உடலோடு உறைந்தாய் நிராமயமே!

பார்க்கப் பலவிதமாய்ப் பல்லுயிர்க் குள்ளிருந்தும்
ஆர்க்கும் தெரியாமல் ஆனாய் பராபரமே!

உள்ளுயிரின் உள்ளே உறைந்தபரஞ் சோதிவரில்
கள்ளமனந் துள்ளாதென் கண்ணே ரஹ்மானே!!

சேர்க்கும் திரவியமும் சித்ரமணி மண்டபமும்
காக்கும் துணையோ வென்கண்ணே ரஹ்மானே!

—(குணங்குடி மஸ்தான்)

நண்ணும் உயிருக் குயிர்நீயாம்.
நாடும் அன்பு நீயேயாம்.
கண்ணுள் மணியும் நீயேயாம்.
கருத்துள் ஒளியும் நீயேயாம்.
பண்ணின் சுவையும் நீயேயாம்.
பாவின் நயமும் நீயேயாம்.
எண்ணின் நீயல் லாதபொருள்
யாதும் உண்டோ இவ்வுலகில்.
எங்கும் மனிதர் உனைத்தேடி
இரவும் பகலும் அலைகின்றார்.
எங்கும் உள்ள துன்வடிவாம்;
எனினும் குருடர் காண்பாரோ?
எங்கும் எழுவ துன்குரலாம்
எனினும் செவிடர் கேட்பாரோ?
எங்கும் என்றும் எவ்வுயிரும்
யாவு மான இறையவனே!

—(கவிமணி)

மெல்லிதய மலர் விரிந்து, தேன் அமுதம் சொரியும் மன்ஸூருடைய நிலைமையைப் பொதுமக்கள் அறியமுடிய வில்லை. ஞானத் துறையிலுள்ளோர் அவருடைய நிலை மையை நன்கு தெரிந்துகொள்ளவில்லை. எல்லோரும் அவரை வெறுத்தார்கள்.

பொல்லான் என்பர் ; அதனுலென் ?
 புனிதன் என்பர் ; அதனுலென் ?
கல்லான் என்பர் ; அதனுலென் ?
 கலைஞன் என்பர் ; அதனுலென் ?
சொல்லா வசைகள் சொன்னுலென் ?
 சூழ்ந்து நின்று புகழ்ந்தாலென் ?
எல்லா நாளும் ஒருநாள்போல்
 இருக்க வேண்டும் என் மனமே !
எண்ணி எண்ணி என் குறைகள்
 ஏதோ நிதமும் கூறிடுவர் ;
பண்ணுஞ் செயல்கள் பழித்திடுவர் ;
 பாவி என்றுந் தூற்றிடுவர் ;
மண்ணில் யானேர் ஒளிவட்டம்
 மற்றவ் வட்டம் நோக்கிடுவோர்
கண்ணில் காண்பது அவரவர்தம்
 காட்சி யல்லால் வேருமோ ? —(கவிமணி)

மன்ஸூர் மூர்க்கரோடு முனியவில்லை. சிந்தை நொந்து விடவில்லை. பாதகரைப் பகைக்கவில்லை. கோள் சொல்வோரைக் கண்டிக்கவில்லை.

மன்ஸூரைக் கண்டால் மக்கள் ஓட்டம் எடுப்பார்கள்! அவரை விலக்கினுர்கள் ! அவருடன் தொடர்புகொள் வதைக் குற்றமாகக் கொண்டார்கள்! தசை அழுகித் துர் நாற்றம் நிறைந்த குஷ்டரோகியைக் கண்டதுபோல அவரைக் கண்டதும் பயந்தோடினுர்கள்!

ஐந்துவிதப் பூதஇயல் ஆழ்ந்தாந்தே ஆய்வர்.
ஆழியடி மணலுயிரை ஆராயச் செல்வர்.
வந்தருகும் இமயமுடி காணவிரைந் தெழுவர்.
வானவெளி மண்டிலங்கள் வகையறிய முயல்வர்.
நந்துபனி வடதுருவம் நண்ண மனங்கொள்வர்.
நானிலமும் தலைவணங்கும் நாட்டமுடன் உழல்வர்.
சிந்தைநெறி அருளாட்சி தேடுவரோ மாந்தர்!
—(திரு. வி. க.)

அங்கிருந்து புறப்பட்டார். அடுத்த ஊருக்குச் சென்றார். யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே. மன்ஸூர் அங்கு வருமுன்னே அவரைப் பற்றிய செய்திகள் மக்களுக்கு எட்டிவிட்டன. எனவே, அவர்கள் அவரை ஒதுக்கித் தள்ளினார்கள். அடுத்த நகரம்! அதற்கடுத்த நகரம்! இவ்வாறு சுமார் ஐம்பது நகரங்களுக்குச் சென்றார். எங்கு சென்றாலும் தங்குமிடம் கிடைக்கவில்லை. அவரது பெயரைக் கேட்டவுடன்—அவரைக் கண்டவுடன்—மக்கள் அவரைத் துரத்திவிடுவார்கள்.

அக்காலமும் இக்காலமும் இல்லாமல், இரவையும் பகலையும் கடந்த பரவெளியிலிருந்த பெரியாரை, ஒலி கடந்தும், ஒளி கடந்தும் ஓங்கு பரம்பொருளில் மூழ்கிய மன்ஸூரை அந்தப் பாமர மக்கள் அறிந்தாரில்லை! தனி யோகரது உள்ளத் தாமரையிலே, தயிரில் உள்ள நெய்யைப் போன்று, வீற்றிருக்கும் தயாபரனில் தோய்ந்த மன்ஸூரை அறிவாரில்லை!

ஆனந்தம் வேறென்னும் அறியாமை நீங்கின்
ஆனந்தம் நீ என்னும் மெய்யறிவு தேங்கும்
ஆனந்தம் நீ என்னில் ஆனந்தம் எல்லாம்
ஆனந்தம் எங்கெங்கும் ஆனந்தம் அப்பா.

ஆனந்தம் மறைப்பதெது? ஆணவமே அது " தான் "
ஆனந்தம் " தான் அந்தம் " ஆசிரியர் மொழியே
ஆனந்தம் பொங்கி எழும் ' தான் ' அந்தம் எய்தின்.
ஆனந்த அடைவினுக்குத் " தான் " அறுக்க அருளே!
—(திரு. வி. க.)

## 8. பக்தாத்–'' அனல் ஹக் ! '' முழக்கம்

சாகாமல் செத்திருக்கும் சற்குருவின்
குணங்குடியைச் சார்ந்தோமாகில்,
சாகாமல் செத்திருக்கும் சாயுச்ய
பதந்தரும், சாட்சாதி யாக்கும்.
சாகாமல் செத்திருக்கும் தன்மயத்தோர்க்கு
உற்ற பெருந்தகையும் காட்டும்.
சாகாமல் செத்திருக்கு முத்தியஞ்சித்
தித்திடுங்காண் தனக்குத் தானே.
—(குணங்குடி மஸ்தான்)

ஹஸ்ரத் மன்ஸுருக்கு இப்பொழுது வயது ஐம்பது ஆகிவிட்டது. இறுதியாக பக்தாத் நகரம் வந்துசேர்ந்தார். அந்த நகரிலே தங்கிவிட்டார். அங்கு ஹஸ்ரத் அபூ பக்ர் ஷிப்லி (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) என்ற ஸுஃபி இருந்தார். அவரும் ஞான மார்க்கத்திலே உயர்வு பெற்றவர். மெய்மறந்த (மஸ்த்தான்) நிலைமையில் இருப்பார். அக்கால • ஞானசிரியர் (மஷாயிக்)களுடன் தொடர்புள்ளவர். இஷ்க் என்னும் இறை நேசத்திலே அவர் மூழ்கியிருந்தார். இதை அறியாத பொதுமக்கள் அப் பெரியாரைப் பைத்தியம் பிடித்தவர் என்றே கருதினார்கள்! ஒரு சமயம் அவரைப் பைத்திய சிகிச்சை செய்யும் மருத்துவ மன்றத்திலும் வைத்தார்கள்!

மன்ஸூர் அந்த மகானிடம் சென்றார். "எனக்கு ஒரு கஷ்டமான நிலைமை ஏற்பட்டுவிட்டது. உலகப் படைப்புகளெல்லாம் இருக்குமிடந் தெரியாமல் என் பார்வையை விட்டு மறைந்து போய்விட்டன!" என்று அவரிடம் முறையிட்டார். அவரது நிலைமையை உணர்ந்த ஹஸ்ரத் அபூபக்ர் ஷிப்லி அவருக்கு புத்திமதிகள் கூறினார்.

"நேசனுடைய இரகசியத்தை மறைக்கவேண்டும்!" என்றார். இந்தப் புத்திமதியால் மன்ஸூர் பலனடைந்தார். கூறப்பட்ட ஆலோசனையின்படி நடக்க முயன்றார்! முயன்றார்! விடாமல் முயன்றார்! அடங்கி—ஒடுங்கி—இருந்தார்! ஆனால், இதன் பலன் என்ன? எதிர்பார்த்ததற்கு மாற்றமாகவே முடிந்தது. அடக்கப்பட்ட ஆன்ம சக்தியானது பீறிட்டுக்கொண்டு கிளம்பியது.

அனல் ஹக்!
நானே மெய்ப்பொருள்!
நானே இறைவன்!

என்று கோஷஞ்செய்யத் துவக்கியது. இந்தக் கோஷமானது, பொதுமக்களைத் திடுக்கிடச் செய்தது. இதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால், அது ஆத்மீகத் துறையினரையும் திடுக்கிடச் செய்தது! "இந்த முழக்கம் இஸ்லாமிய ஷரிஅத் கொள்கைகளுக்குப் புறம்பானதும், குப்ர் (Kufr) சம்பந்தமுள்ளதுமான வார்த்தைகளாகும்" என்று உலமாக்கள் அவரை எச்சரித்து, அறிவு புகட்டினார்கள். ஸூபிகளும் அவ்வாறே கூறி, அவரைத் தடுக்க முயன்றார்கள்.

ஆனால், "வஹ்தத்" என்ற கடலில் மூழ்கிய மன்ஸூர் தம்மை அடக்கிக்கொள்ளும் சக்தியற்றிருந்தார். "ஹக்" (மெய்ப்பொருள்) என்ற ஒன்றைத் தவிர

வேறொன்றையும் அறியமுடியாத நிலைமையில் இருந்தார். தன்னுணர்வற்று அல்லாஹ்வின் "உஜூத்"—உள்ளமை— அன்றி மற்றொன்றும் அவருக்குக் காட்சியளிக்கவில்லை. எனவே, எத்தகைய எச்சரிக்கைகளும், அச்சமூட்டுதல் களும், புத்திமதிகளும் அவருக்கு அணுவளவேனும் பயனளிக்காமல் போய்விட்டன. ஆனால், இதற்கு மாற்ற மாக, நாட்கள் செல்லச்செல்ல அவரது அற்புத நிலைமை யில் அதிகரிப்பே காணப்பட்டது. ஒருநாள்,

"எவனை நான் நேசிக்கிறேனோ, நான் அவனாகவே இருக்கிறேன்!
எவனை நான் நேசிக்கிறேனோ அவனும் நானே!
நாங்கள் இருவரும் ஒரே வண்ணத்திலே (வடிவத்திலே) கலந்துவிட்ட
இரண்டு ஆவி (ரூஹ்) களாக இருக்கிறோம்!
ஆகையால், நீங்கள் என்னைப் பார்க்கும்பொழுது அவனைப் பார்க்கிறீர்கள்!
அவனைப் பார்க்கும்பொழுது என்னைப் பார்க்கிறீர்கள்!"

என்ற கருத்துள்ள பாடலைப் பரவசம் மேலிட்ட நிலைமையில் பாடினார்!

பல நூல்கள் கற்ற பண்டிதர்கள் பதறினார்கள்! வாது செய்தார்கள். கண்டனங்கிழிய முழங்கினார்கள்!

மன்ஸூரின் இந்தப் புதிய முழக்கத்தைக் கேட்ட பொதுமக்கள் இன்னும் அதிகமாகத் திகிலடைந்தார்கள், சீற்றங்கொண்டார்கள். ஷரீயத்தைப் பின்பற்றுவோரான (லாஹிர்) உலமாக்களிடம் சென்று முறையிட்டார்கள். "ஏன் மன்ஸூருக்குத் தண்டனை அளிக்கக்கூடாது?" என்று குறை கூறினார்கள்.

இஸ்லாமிய மத தர்மங்களிலும், அறநெறியான ஸுன்னத்திலும் அனுபவமுள்ள முன்னூற்று எழுபது உலமாக்கள் உடனே ஸூபிகளிடம் சென்று கலந்தாலோ சித்தார்கள். அவர்களது அபிப்பிராயத்தைக் கேட்டார்கள்.

# 9. குப்ர் பத்வா (Kufr Fatwa)

இறுதியாக, மன்ஸூர்மீது " குப்ர் பத்வா " கொடுக்கப் பட்டது. அதாவது அவர் முஸ்லிமல்ல — காபிர் — இறைவனை நிராகரித்தவர் — என்று தீர்மானித்து சட்ட பூர்வமாக முடிவு செய்யப்பட்டது. மதசம்பந்தமாக அவ்வப் பொழுது ஆலிம்களால் அளிக்கப்படும் முடிவுகளுக்கு " பத்வா " என்று பெயர்.

அத்வைத சிந்தாந்திகளான ஸூபிகளோ, இந்த ஞான இரகசியங்களையெல்லாம் அறிந்தவர்கள். மன்ஸூர் அப்பொழுதிருந்த பரவச நிலைமையும் (ஹால்) அவர் களுக்குத் தெரியும். சுயமுயற்சியால் வந்த ஞான நிலைக்கு " மகாம் " என்று பெயர். ஆனால், இறை அருளால் வரும் ஞான நிலைக்கு " ஹால் " என்று பெயர். அந்தத் துறை யிலுள்ள பெரியார்களுக்கு அகப்பார்வை உள்ளோருக்கு, அவரது மேலான வரிசை தெரியாமற் போகவில்லை. ஆனால், அவர்கள் ஷரீஅத்தை விட்டுவிட முடியவில்லை. எனவே, அவர்களும் மௌனம் சாதித்தார்கள். ஒருதலைப் பட்சமாக ஒன்றுஞ் செய்யமுடியாத — சொல்லமுடியாத — நிலையில் இருந்தார்கள். மன்ஸூரை அந்த ஸூபிகள் எதிர்க்காமையால் அவர்களது மௌனத்தை, ஒரு பாதிச் சம்மதமென்றே பொதுமக்கள் நினைத்தார்கள். ஆகவே, மன்ஸூரை முழு காபிர் என்று கருதினார்கள்.

ஆனால், இந்த " காபிர் " பட்டம் கிடைத்ததைப்பற்றி மன்ஸூருக்குச் சிறிதும் அச்சமில்லை. அதற்கு மாற்ற மாக அவர் இறைவனை நோக்கி,

" திகிலடைந்தோருக்கு வழிகாட்டி யானவனே !
அவர்கள் கூறும் " காபிர் " என்ற நிலையில்

நான் இருப்பது உண்மையானால் இந்த 'குப்ரை' அதிகமாக்குவாயாக!

என்று பிரார்த்தனை செய்தார்.

வஞ்ச வேல்கொடு மார்பி லெறியினும்
விஞ்ச வேதழல் மூட்டி யெரிக்கினும்
நஞ்சி னாரழ னாக நலியினும்
அஞ்சி டாதவ ரானந்த மாவரே.

—(குணங்குடி மஸ்தான்)

காபிர் என்று அவர்மீது பிரகடனம் செய்யப்பட்ட பத்வாக்கள்மீது அவர் கவனம் செலுத்தவே இல்லை. அவருக்கு விரோதமாக மக்கள் என்ன செய்கிறார்கள் என்று அவர் தமது கவனத்தைச் செலுத்தினால்தானே மக்கள் செய்வதெல்லாம் அவருக்குத் தெரியவரும்! ஆனால், அவரோ தாம் சமைத்துக்கொண்ட புத்துலகில்—தனியுலகில்—சஞ்சாரஞ் செய்துகொண்டிருந்தார்!

ஹக்! ஹக்! ஹக்! அனல் ஹக்! என்பதைத் தொடர்ந்து முழங்கிக்கொண்டிருந்தார்.

இத்தகைய பரவச நிலையில் அவர் இல்லாத சமயத்திலே மக்கள் அவரிடஞ் சென்று,

"ஏன் இஸ்லாமிய ஷரீஅத்திற்கு விரோதமாக 'அனல் ஹக்!' என்று கூறுகிறீர்கள்?"

என்று கேட்டார்கள். அதற்கு அவர்,

"நான் அவ்வாறு கூறுவேனாயின் கொலைக்கு உரியவனே!"

என்று மறுமொழி கூறியதாகவும் சொல்லப்படுகிறது.

எதிர்ப்பு

தினந்தோறும் எதிர்ப்பு அதிகரித்தது. அவரை எவ்வாருயினும் தூக்கு மேடையில் ஏற்றிவிட வேண்டுமென்று எதிரிகள் கங்கணங்கட்டிக் கொண்டார்கள். அவர்கள் அல்லாமா அபுல் அப்பாஸ் என்பவரிடம் சென்ருர்கள், அவர் மார்க்க விஷயங்களை நன்ருய் அறிந்தவர். அக்காலத்தில், அவரே அரசாங்கத்தில் ஷரீஅத் சம்பந்தமான பத்வா தீர்ப்புகள் அளிக்கும் நீதிபதி (முப்தி - காஜி) என்னும் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார்.

"மன்ஸுரைப் பற்றி உங்கள் அபிப்பிராயத்தை வெளியிடவேண்டும்!" என்று அவரிடம் கேட்டார்கள். ஆனல், அவர் மறுமொழி யொன்றும் கூறவில்லை. முற்றும் மௌனம் சாதித்தார். ஆனல், எதிர்ப்பாளர் அவரைத் தொந்தரவு செய்தார்கள். மன்ஸுரைப் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிட வேண்டுமென்று வற்புறுத்தினர்கள். எனவே, அல்லாமா அபுல் அப்பாஸ்

"இந்த மனிதருடைய நிலைமை எனக்கு விளங்கவில்லை. இதைப்பற்றி அபிப்பிராயம் வெளியிடச் சக்தியற்றவனுக இருக்கிறேன்" என்ருர்.

நினைப்பும் உதிப்புமெலாம் நின்செயலென்று அன்பர் உளம்
திணைப்போதும் விட்டுத் திரும்பார் நிராமயமே.

தன்னை அறிந்தால் தனக்கொருகே டில்லையெனச்
சொன்ன மொழியே சுகங்காண் நிராமயமே.

விண்ணுதி யாவும் விளங்குவது நீ யெனவென்
கண்ணு வுங்கனவு கண்டேன் நிராமயமே.

உய்த்த துணர்வதெல்லாம் உயிர்க்குயிர் நீ தானெனவும்
சித்தந் தெளிந்தோர் திறங்காண் நிராமயமே.

—(குணங்குடி மஸ்தான்)

## 10 கலீபா முக்ததிர் பில்லாஹ்-மந்திரி

அவர்கள் அனைவரும் அங்கிருந்து மனச்சோர் வடைந்து புறப்பட்டார்கள். அப்பொழுது பக்தாத் நகரிலே அப்பாஸி அரச குடும்பத்தைச் சேர்ந்த கலீபா முக்ததிர் பில்லாஹ் (ஹி. 295-320. கி. பி. 907-932) என்பவர் ஆட்சி செய்துகொண்டிருந்தார். கலீபாவின் மந்திரியான ஹாமித் பின் அப்பாஸ் என்பவரிடம் சென்று முறை யிட்டார்கள். மதவிஷயங்களுடன் அரசியல் சம்பந்தமான குற்றச்சாட்டுகளையும் மன்ஸூர் மீது சுமத்தினார்கள். அதாவது:

"இந்த மன்ஸூர்—தம்மைப் பூமியின் அதிபதி என் கிறார். எத்தனையோ மக்கள் அவரைப் பின்பற்றுகிறார்கள். இதனால் அரசாங்கத்திற்குப் பேராபத்து நேரிடுமென்று நம்ப இடமிருக்கிறது" என்று கூறினார்கள்.

இந்தக் குற்றச்சாட்டுகளை மெய்யென்று நிரூபிப்பதற் காக பல சாட்சிகளையும் சான்றுகளையும் சமர்ப்பித்தார்கள். இவ்வாறாகப் பொய்யான விஷயங்களைக் கூறி மந்திரியைத் தங்கள் கட்சியில் சேர்த்துக்கொண்டார்கள். எனவே, மந்திரியும் மன்ஸூருக்கு விரோதியாகிவிட்டார்.

மந்திரி எழுந்தார். உலமாக்களை அணுகினார். மன் ஸூரைக் கொலை செய்வதற்கான "பத்வா" கொடுக்க வேண்டுமென்று ஆலிம்களிடம் கேட்டார். ஆனால், உல மாக்களும் உடனடியாக "பத்வா" கொடுக்கவில்லை. தாம தித்துக்கொண்டிருந்தார்கள். எனினும், எதிர்ப்பாளர் செயலற்றிருக்கவில்லை. அவர்களது எதிர்ப்பின் வேகம் குறையவில்லை. எத்தனையோ முயற்சிகள் செய்தார்கள்.

இறுதியாக, மன்ஸூர் எழுதிய ஒரு புத்தகப் பிரதியைக் கொண்டுவந்தார்கள். அதில், ஷரீஅத்திற்கு விரோதமாக அவர் எழுதியிருந்த நூல் ஒன்றைச் சமர்ப்பித்தார்கள். ஏன் ?

"ஷரீஅத்திற்கு விரோதமாக மன்ஸூர் எழுதிய பிரதியைச் சாட்சியமாகச் சமர்ப்பிக்காத வரையில் அவருக்கு மரணதண்டனையிட நாங்கள் சம்மதியோம்" என்று உலமாக்கள் கூறியிருந்தார்கள்.

ஹாமித் பின் அப்பாஸ் என்ற மந்திரி எல்லா உலமாக்களையும் ஒன்றுசேர்த்தார். அவர்கள் முன்னிலையிலே, ஷரீஅத்திற்கு விரோதமாக மன்ஸூர் எழுதிய புத்தகத்தைச் சமர்ப்பித்தார்கள்.

## 11. விசாரணை

ஐயன்குணங் குடியானை யன்றிவே றுண்டென்று
ளாய்ந்து பார்த்தேன்.
ஐயன்குணங் குடியானை யன்றிவே றென்று மென்னு
ளாயக் காணேன்.
ஐயன்குணங் குடியானே யானேயென் றறிந்த பின் என்
ஐயன்குணங் குடியானே யதிமோகத் திருநடன
மாடுவானே.

⁂ ⁂ ⁂ ⁂

உனக்குள் நானாகவும் என்றனக்குள் நீயாகவும்
எனக்குள் நானுனக்குள் நீ என்றீதாய் நின்ற
— (குணங்குடி மஸ்தான்)

மன்ஸூர் அங்கு அழைக்கப்பட்டார்.

"ஷரீஅத்திற்கு விரோதமாக ஏன் இதில் எழுதினீர்?" என்று கேட்கப்பட்டார்.

"இதை நான் எழுதவில்லை, இதன் நூலாசிரியன் நானல்லன். (நூலாசிரியரின் பெயரைக் குறிப்பிட்டு) நான் வேறு நூலிலிருந்து எடுத்து எழுதினேன்" என்று விடையளித்தார் மன்ஸூர்.

இதைக் கேட்டவுடன் அபூ உமர் மக்கீ என்ற நீதிபதி

"முதல் நூலாகக் குறிப்பிட்ட அந்தப் புத்தகத்தை ஆதி முதல் அந்தம் வரையில் நான் படித்திருக்கிறேன். ஆனால், இந்த வசனங்களை அதில் நான் பார்க்க வில்லையே!" என்றார்.

எதிரிகளுக்கு இப்பொழுது நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது. மந்திரி ஹாமித் பின் அப்பாஸ் என்பவர் கச்சை கட்டி ஏழுந்தார்.

"மரண தண்டனை!" என்றார்.

நீதிபதி ஆலோசனை செய்தார்! தாமதித்தார்! காலம் கடத்த முயன்றார்! ஆனால், மந்திரியோ மன்ஸூரின் இரத்தத்தைக் குடிக்கும் தாகத்தில் இருந்தார், எனவே, நீதிபதியை வற்புறுத்தினர்.

மந்திரியாயினும், பாதுஷாவாயினும், ஸுல்தானு யினும், கலீபாவாயினும் நேர்மை தவறி நடந்தால் நீதி பதிகள் துணிவுடன் கண்டிப்பார்கள். அரசன் இடும் நேர்மையற்ற, நியாயந்தவறிய கட்டளைகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதனால், தங்களுக்கு எத்தகைய தீங்கு வரினும் சகித்துக் கொள்வார்கள், இஸ்லாமிய சரித்திரத்திலே இத்தகைய மேன்மையான நீதிபதிகளின் வாழ்க்கை வரலாறுகள் நிறைந்திருக்கின்றன.

ஆனால், பொன்னுக்கும், புகழுக்கும், அரசாங்கத் தாரது தற்காலிகமான உதவிக்கும் அடிமையாகித் தங்கள் மனச்சாட்சியை விற்போரும் உண்டல்லவா?

இந்த அப்பாஸி அரசாங்கத்தின் நீதிபதி அந்த அமைச்சரைக் கண்டு அச்சங்கொண்டார். மந்திரி கோபித்துக்கொள்வாரோ என்று பயந்தார். மந்த புத்தியுடன் மந்திரியின் சீற்றத்திற்குத் தலைசாய்த்தார். எனவே, தீர்ப்பு (பத்வா) எழுதிவிட்டார். அவரைப் பின்பற்றி எல்லா உலமாக்களும் கையெழுத்திட்டார்கள். அந்த மந்திரி உடனே மன்ஸூரைச் சிறைச் சாலைக்கு அனுப்பிவிட்டார்.

கலீபாவின் அனுமதி பெற்றபிறகே, மன்ஸூரைக் கொலைக் களத்திற்கு அனுப்பவேண்டும். மன்ஸூருடைய குற்றகள் சம்பந்தமாக எல்லா தஸ்தாவேஜுகளையும் கலீபாவிடம் மந்திரி ஹாமித் பின் அப்பாஸ் சமர்ப்பித்தார், ஆனால், கலீபா கையெழுத்திடவில்லை.

" மன்ஸூர் மரண தண்டனைக்கு உரியவர்!" என்று "ஹஸ்ரத் ஜுனைத் பக்தாதீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கையெழுத்திடாத வரைக்கும் நான் இதில் தலையிடமாட்டேன். கொலைத் தண்டனைக்கான உத்தரவும் கொடுக்க மாட்டேன்" என்றார் அந்த கலீபா.

ஹஸ்ரத் ஜுனைத்திடம் இவ்விஷயத்தை மந்திரி தெரியப்படுத்தினர். கையெழுத்திடும்படிக் கேட்டுக்கொண்டார். ஆனால், ஹஸ்ரத் ஜுனைத் கையெழுத்திடவில்லை. இதில் தலையிட அவருக்கு விருப்பமில்லை. காலம் கடந்து கொண்டே போயிற்று. ஆனால், 'ஹஸ்ரத் ஜுனைதிடம் அடிக்கடி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தம்மிடம் வந்த தஸ்தாவேஜுகளில் கையெழுத்திடாமல் ஆறு தடவை ஹஸ்ரத் ஜுனைத் அவற்றைத் திருப்பி அனுப்பி விட்டார். ஏழாவது தடவை, கலீபாவே அவரிடம் சென்று,

" ஆம்!"—"இல்லை"—என்ற இரண்டில் ஒன்று கூறுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

எனவே, ஹஸ்ரத் ஜுனைத் தாம் அணிந்திருந்த ஸூபி உடையை நீக்கினர். உலமாக்களின் ஆடையை அணிந்தார்; எழுதினர்:

"ஷரீஅத் சட்டப்படி லாஹிரில் கொலைத் தண்டனை பத்வா கொடுக்கப்படுகிறது. ஆனால், பாத்தின் என்ற அக நிலையை (அந்தரங்கத்தை) அல்லாஹ்வே அறிவான்"

அன்றொரு நாள் மன்ஸூர் இதே ஹஸ்ரத் ஜுனைதிடம் தமது நிலைமை மாறிய ஆரம்ப நாட்களிலே,

"என் இரத்தத்தால் தூக்குமரம் சிவப்பாகும். ஆனால், அச்சமயம் நீங்களும் உங்கள் உடையை மாற்றிக் கொள்வீர்கள்" என்று தீர்க்கதரிசனமாகக் கூறியது இன்று நிறைவேறியது.

## 12. சிறைச்சாலையா? தவச்சாலையா?

இனி, கலீபா கையெழுத்திடாமல் ஓர் ஆண்டுவரை தாமதித்தார். எனவே, மன்ஸூர் ஓர் ஆண்டு சிறையில் காலங்கழித்தார். சிறைச்சாலையைத் தவச்சாலையாக மாற்றினர். அடிக்கடி "அனல் ஹக்!" என்று முழக்கஞ் செய்வார். இரவெல்லாம் நின்றுகொண்டே தொழுவார். மண் உறங்கும், விண் உறங்கும். ஆனால், மன்ஸூருடைய கண் உறங்காது. காதலால் கசிந்து, சிறையில் ஒவ்வொரு நாளும் ஆயிரம் ரக்அத் நபில் தொழுகை தொழுவார்.

"அனல் ஹக்!—நானே மெய்ப்பொருள்—என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆனால், இவ்வாறு எதற்காக

யாருக்காகத் தொழுகிறீர்கள்? யாரை நோக்கித் தொழுகிறீர்கள்?" என்று மக்கள் கேட்டார்கள். அவர்களுக்கு மறுமொழியாக, அவர்,

"நமது மேன்மையை நாம் நன்றாய் அறிவோம். எனக்காகவே நான் தொழுகிறேன்! என் பெருமையே எனக்குப் பெருமை! நானே கேட்பவன். நானே கேட்கப் படுவோன்! நானே ஹபீப், நானே மஹபூப்! நானே அணு, நானே முட்டை! நானே துளியும், நானே கடலும்! தன்னை அழித்தவனிடம், இரண்டு என்ற பேச்சுண்டா? எல்லாம் அவனுடைய தாத்தின் ஒளி (சுயஞ்சோதி). எங்கு பார்த்தாலும் அங்கெல்லாம் அவன் ஒளியே! (நூர்). அவனில்லாத இடமே கிடையாது. இடையிலுள்ள திரை மறைந்துபோனல், இரண்டு என்பதே கிடையாது. ஒன்ருகிவிட்டால், நீ, நான் என்பது அற்றுப்போய்விட்டது—அனல் ஹக்!" என்று மறுமொழி கூறினர்.

அவர் சிறைச்சாலையில் இருக்கும்பொழுது ஒரு சமயம் இப்னு அத்தார் என்ற ஒரு நண்பர், "சகோதரரே! நீங்கள் "அனல் ஹக்!" என்று கூறியதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுங்கள். விடுதலை பெற்றுவிடுவீர்கள்" என்று சொல்லியனுப்பினர். "ஆனல், மன்னிப்பு விரும்பி மன்னிப்புக் கேட்பவனே பிரசன்னமாக இல்லையே" என்று மன்ஸுர் மறுமொழி கூறினர்.

**ஓர் "அற்புதக் கனவு"**

ஹஸ்ரத் மன்ஸுர் - ஒரு நாளிரவு ஒரு கனவு கண்டார். அதில் ஒரு கூடாரத்தைப் பார்த்தார். அங்கு எம்பெருமானர் முஹம்மத் முஸ்தபா ஸல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இருந்தார்கள். எல்லா அவ்லியாக்களும் இருந்தார்கள்.

அந்தக் கூடாரத்திலே ஒரு துவாரம் காணப்பட்டது. அந்த வழியாக சூரியனுடைய கிரணங்கள் வந்துகொண் டிருந்தன. அங்கிருந்தோருக்கெல்லாம் இதனால் கஷ்டம் உண்டாயிற்று. எல்லாரும் அந்தத் துவாரத்தை அடைக்க விரும்பினார்கள். எத்தனை விதங்களில் முயன்றாலும் அவர் களது முயற்சி பயனடையவில்லை. இதைக்கண்டு திரு நபியவர்கள் கண்களில் நீர் ததும்ப, "இது முடியாத காரியம். மன்ஸூர் தன் தலையைக் கொடுக்காத வரை இந்தத் துவாரம் அடைபடாது" என்று கூறினார்கள்.

இதைக் கேட்டு, ஹஸ்ரத் மன்ஸூர்,

"ஒரு தலையென்ன? ஆயிரம் தலையை அர்ப்பணம் செய்வேன். இந்தப் பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்? இந்தப் பெருமை எவருக்குக் கிட்டும்? இறை காதல் பாதையிலே சிரசைத் தியாகஞ் செய்வதைவிட மேலான ஆவல் ஏதேனு முண்டோ! சொல்லளவில் நிற்பதில் பிர யோஜனம் ஏது? காதல் விளையாட்டில் தலை உருளுவதே உண்மையான செயலுருவமாகும்" என்று கூறினார்.

இதைக்கேட்டு, நபிநாயகமவர்கள், "இவர் மெய்யான காதலர்" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

இந்தக் கனவு கண்டு, ஹஸ்ரத் மன்ஸூர் எழுந்தார் "அனல் ஹக்" என்று முழக்கினார்.

ஹஸ்ரத் மன்ஸூர் ஹல்லாஜ் சிறை சென்ற முதல் நாள் இரவிலே, சிறைச்சாலைத் தலைவர் மேற்பார்வை செய்யச் சென்றார். ஆனால், ஹஸ்ரத் மன்ஸூர் காணப் படவில்லை! இரண்டாம் இரவில் சென்றார் சிறைச் சாலையே காணாமல் போய்விட்டது! மூன்றாம் இரவில் சென்றார். ஹஸ்ரத் மன்ஸூரைக் கண்டார்.

"முதல் இரண்டு இரவுகளில் எங்கு சென்றீர்கள் ?" என்று ஹஸ்ரத் மன்ஸூரிடம் கேட்கப்பட்டது. முதல் இரவில் தர்காஹ்வில் இருந்தேன். இரண்டாம் இரவில் இங்கு தர்பார் நடந்தது. அதனால், உங்களுக்கு சிறைச் சாலை புலப்படவில்லை. ஷரீஅத்தைப் பாதுகாப்பதற்காக இன்று நான் இங்கு அனுப்பப்பட்டேன். ஆகவே, இனி நீர் இங்கு வரலாம். உமது வேலைகளைச் செய்யலாம்" என்று மறுமொழி கூறினர்.

ஹஸ்ரத் மன்ஸூர் சிறைவாசஞ் செய்கையிலே அவரால் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. அவற்றில், இறுதியான அற்புதமாவது, அந்தச் சிறைக் கூடத்தி லிருந்த நானூறு கைதிகளையும் அவர் விடுவித்து விட்டார்! தமது விரலால் சமிக்ஞை செய்தார். கைதிகளின் விலங்குகள் அறுந்து விழுந்தன. அப்பால், சிறைச்சாலை யின் சுவரை நோக்கி, தமது விரலால் சுட்டிக் காட்டினர். சுவர் பிளவு பட்டது. உடனே, எல்லாக் கைதிகளும் வெளியே போய்விட்டார்கள். அவ்வாறு செல்லும் கைதி களிலே ஒரு கைதி, ஹஸ்ரத் மன்ஸூரை நோக்கி,

"நீங்கள் ஏன் உள்ளே நிற்கிறீர்கள்? நீங்களும் வெளியில் வாருங்கள்!" என்ருன். அதற்கு விடையாக மன்ஸூர்,

"நீங்களெல்லாம் கலீபாவின் கைதிகள். நானோ அல்லாஹ்வின் கைதி. நீங்கள் விடுதலை பெறலாம். ஆனல், நான் விடுதலை பெறமுடியாது" என்ருர்.

ஹஸ்ரத் மன்ஸூர் ஹல்லாஜ் இறைவனுடைய பிரார்த்தனைக்காக வுலு செய்வார். கிப்லாவை நோக்கி உட்காருவார்.

“என் இறைவனே! இருலோகங்களுக்கும் அதிபனே! நீயே தனித்தவன். நீயே எல்லாவற்றையும் படைத்தவன். நீயே உலகங்களைக் காப்பவன். நீயே கரை சேர்ப்பவனும். எல்லோருடைய இருதயங்களின் இரகசியங்களையும் நீயே அறிபவன். உனக்கு மறைவானது ஒன்றுமே கிடையாது. அர்ஷும் குர்ஸியும் நீயே படைத்தாய்! நீயே என்னை உனது காதலனாக்கினாய். நீயே ஜின்களையும் மனிதர்களையும் படைத்தாய். மனதிலே வியாதியுள்ளோருக்கு மருந்தும் நீயே இறைகாதலருக்கு இன்பமும் நீயே! கரை சேர்ப்பவனும் நீயே! உன்னை அடைய ஆவல் மிகுந்திருக்கிறேன். இதில் எனக்குத் துணை நீயே! உன்னையன்றி வேறொன்றும் என் உள்ளத்தில் இல்லை. உன் காதல் நெருப்பே என்னைப் பற்றிப் பிடித்துக்கொண்டு எரிக்கின்றது. உன்னை அடைந்தால்தான் இந்த நெருப்பு அணையும். இனி என்னால் இந்த நெருப்பின் உஷ்ணத்தைத் தாங்கமுடியாது. உன்னை அடையும் பைத்தியம் என்னைப் பிடித்துக்கொண்டது. விளக்கில் விழுந்து மடியத் துடித்துக்கொண்டிருக்கும் விட்டில் போன்று உன் சந்திப்பை நம்பித் துடிக்கிறேன். என் இறைவனே! துரிதமாக என்னுடன் சேர்ந்துவிடு! உன் கலப்பால் என்னை ஆசீர்வதி! உன்னையல்லாதவற்றினின்றும் என் மனதை உன் பக்கம் திருப்பிவிடு. நீ என் மஹ்பூப். நான் உன் ஹபீப். உன்னைச் சேரவேண்டுமென்ற எண்ணம் உண்டான நாள் முதல், வேறொன்றில் என் மனம் செல்லவில்லை. இனி

என்ன தாமதம்? இடையிலுள்ள திரையை நீக்கு! என்னால் பொறுக்க முடியவில்லையே! ஒவ்வொரு விநாடியும் உன் தேட்டத்தில் கழிவது எனக்குத் துன்பமாகவே தோன்றுகிறது. உன்னைச் சேர்வதற்காகவே நான் தூக்கு மரத்தை விரும்புகிறேன்"

என்று பிரார்த்தனை செய்வார்.

கைதிகளை விடுவித்த நிகழ்ச்சியைக் கலீபா கேள்விப் பட்டவுடன் மன்ஸுருக்குத் தூக்குத் தண்டனையென்று கட்டளையிட்டார். இவ்வாறாக, ஓர் ஆண்டு சிறைவாசஞ் செய்து, ஹிஜ்ரி 309, துல் கஅதா மாதம் இருபத்து நான்காம் நாள், ஹஸ்ரத் மன்ஸுர் கொலைக்களத்திற்குக் கொண்டுவரப்பட்டார். தூக்குமேடையில் நிறுத்தப்பட்டார். அவரைத் தொடர்ந்து எதிர்த்தோர், எப்படியாயினும் அவரைக் கொன்றுவிடவேண்டுமென்று கங்கணங் கட்டிக் கொண்டிருந்தார்களல்லவா? அத்தகைய விரோதிகளின் விருப்பம் அன்று நிறைவேறியது.

அந்த நாள் பக்தாத் நகரின் சரித்திரத்திலே ஒரு முக்கியமான நாள். அன்று பக்தாத் நகரிலிருந்தும் அதைச் சுற்றியுள்ள பற்பல இடங்களிலிருந்தும் எண்ணிக்கையற்ற மக்கள் கூடிவிட்டார்கள்.

"அவருக்கு ஆயிரம் பிரம்படிகள் அடித்தல் வேண்டும். அதனால் அவர் இறந்துவிட்டால் சரி. இல்லையேல் இன்னும் ஆயிரம் பிரம்படிகள் கொடுக்கவேண்டும்! இதிலும் உயிர் போகவில்லையானால், தூக்கு மரத்தில் தூக்கிவிட வேண்டும்!"

என்று மந்திரி கட்டளையிட்டார்.

ஒன்று! இரண்டு! மூன்று! நான்கு! ஏக ஆயிரத்து இரண்டாயிரம் பிரம்படிகளையும் மன்ஸூர் ஏற்றுக்கொண்டார்! பெரும் பரீட்சை! அளவு கடந்த சோதனை! ஆயினும், ஹா! என்ற வார்த்தை அந்த இறைகாதலரின் நாவிலிருந்து வரவில்லை!

"மன்ஸூரின் மகனே! பயப்படாதே!"

என்று குரல் வருவதை பிரம்பால் அடிப்பவன் கேட்டான். என்ருலும், அவன் அடிப்பதை நிறுத்தவில்லை.

MAW

## 13. தூக்கு மேடையிலே

அப்பால், ஹஸ்ரத் மன்ஸூரைக் கொலைசெய்ய ஆயத்தமானுர்கள். கொலை மேடைக்குக் கொண்டு போனுர்கள். தாங்கமுடியாத மிகப் பளுவான விலங்குகளைப் பூட்டியிருந்தார்கள். ஆனுல், மன்ஸூருக்கு அவற்றின் கனத்தால் யாதொரு மாற்றமும் உண்டாகவில்லை. வெகு உல்லாசமாக நடந்து சென்ருர்! கொலை மேடையில் நின்ருர்! அங்குக் கூடியிருந்த மக்கள் மீது அவரது பார்வை விழுந்தது!

"ஹக்! ஹக்! ஹக்! அனல் ஹக்!" என்று கோஷஞ் செய்தார்.

அச்சமயம் அந்தக் கூட்டத்திலிருந்து ஒரு பகீர் அவர் முன் வந்து நின்ருர்.

பகீர்:—இஷ்க் (இறைகாதல்) என்பது என்ன?

ஹ. மன்ஸூர்:—இன்றும், நாளையும், நாளையினன்றும் நீர் பார்ப்பீர். அதாவது, காதலனை இன்று தூக்கிலிடப்படும். நாளைக்கு அவனை நெருப்பில் எரித்துச் சாம்பலாக்கப்படும். நாளை மறுநாள் அந்தச் சாம்பல் வீசி விடப்படும்.

ஹஸ்ரத் மன்ஸுர் கூறியபடியே மூன்றுநாள் தொடர்ச்சியாக நடந்தது.

பிறகு அவரைத் தூக்குமரத்தில் ஏற்றினுர்கள். அச் சமயம் அவர் தமது சிஷ்யர் ஒருவரை அழைத்து, "அதிக மான இறைவணக்கம் (இபாதத்), நோன்பு, இரவில் கண் விழித்து அல்லாஹ்வையே நினைத்து திக்ர் செய்தல், முதலிய கடுமையான பயிற்சிகள் (ரியாஸத்)—முதலான வற்றின் மூலமாக உனது மனக்குரங்கை அடக்குவாயாக. உன்னைத் தீச்செயல்களின் பக்கம் கொண்டுசெல்லாமல் காப்பாற்றிக்கொள்" என்று உபதேசித்தார்.

மகனைப் பார்த்தார்!

"வணக்கம் செய்வதாகக் கூறுவோர், மெய்ப்பொரு ளின் நினைவையன்றி, ஒரு மூச்சேனும் விடுதல் கூடாது. (ஹராம்). ஹகீகத்தின் அறிவைப் பெற்றுக்கொள்ள முயலுவாயாக!" என்ருர்.

தூக்கு மரத்திற்குச் சென்றவுடன் அவர் தூக்கு மரத்தை முத்தமிட்டார். படியில் ஏறி ஒரு காலை வைத்தார்.

"தூக்கு மரமானது ஆண் மகனுக்கு மிஃராஜ் (வானுல கிற்குச் செல்லும் ஏணி) ஆகும்!" என்ருர். அப்பால், கிப்லாவின் பக்கம் திரும்பினுர். ஏதோ கூறினுர்.

அவருடைய சீடர்கள்,

"எங்களுக்கு-வஸீயத்—இறுதியான புத்திமதி கூறுங் கள்! உங்களை நிராகரிப்போரைப்பற்றி உங்கள் அபிப் பிராயம் என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு, அவர்,

"என்னை நிராகரித்து எதிர்ப்போருக்கு இரண்டு புண்ணியங்கள் கிடைக்கும், உங்களுக்கு ஒரே புண்ணியம் கிடைக்கும். நீங்களோ என்னை

மட்டும் நம்புகிறீர்கள். ஆனால், அவர்கள் தவ்ஹீதையும், ஷரீஅத்தையும் பின்பற்றுகிறார்கள். இஸ்லாமிய சட்டமாகிய ஷரஃவிலே, "தவ்ஹீத்" என்பதே முக்கியமானது" என்றார்.

இதற்கப்பால், ஹஸ்ரத் அபூ பக்ர் ஷிப்லி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவரிடம் வந்தார்.

ஹஸ்ரத் ஷிப்லி :—தஸவ்வுப் என்பது என்ன ?

ஹஸ்ரத் மன்ஸூர் :—நீங்கள் பார்க்கும் தாழ்ந்த நிலைதான்'.

ஹ. ஷிப்லி : —உயர்ந்த நிலை எது ?

ஹ. மன்ஸூர் :—அந்த நிலையை நீங்கள் அடைய முடியாது.

பிறகு, ஹஸ்ரத் மன்ஸூர்மீது மக்கள் கல்லெறிந்தார்கள், ஷரீஅத்தின்படி நடக்கவேண்டுவதை உத்தேசித்து ஹஸ்ரத் ஷிப்லியும் ஒரு பூவை எடுத்து, ஹஸ்ரத் மன்ஸூர் மீது எறிந்தார். அந்தப் பூ ஹஸ்ரத் மன்ஸூரின் உடலில் பட்டவுடன் அவர் "ஹா !" என்று அலறினார்.

"கல் எறிந்தால் மௌனமாய் இருக்கிறீர்கள், ஆனால், பூ எறிந்தால் "ஹா!" என்று எதற்காகக் கூறினீர்கள் ?" என்று மக்கள் கேட்டார்கள்.

"மக்கள் ஒன்றும் தெரியாதவர்கள். ஆனால், ஷிப்லி எல்லாம் அறிந்தவர் ! இதனால்தான், அவருடைய பூவால் எனக்கு வருத்தம் உண்டாயிற்று" என்றார் ஹஸ்ரத் மன்ஸூர்.

பிறகு, அவரது கைகள் வெட்டப்பட்டன ! ஆனால், அவர் சிரித்துக்கொண்டிருந்தார்.

“இது சிரிக்கும் வேளையா?” என்று மக்கள் கேட்டார்கள்.

“மனிதனுடைய கைகளை வெட்டுதல் இலேசான வேலை. ஆனால், நம்முடைய இறைபண்பாகிய ஸிபாத்தின் கைகளை வெட்ட முடியுமா?” என்று மறுமொழியாகக் கூறினர்.

அதன் பிறகு, அவருடைய கால்கள் வெட்டப்பட்டன. மறுபடியும் ஒரு புன்சிரிப்பு.

“இந்தக் கால்களைத் தவிர எனக்கு வேறு கால்களும் உண்டு! அவற்றை வெட்ட முடியுமா?” என்று கேட்டார்.

இவ்வாறு வெட்டப்பட்ட கை கால்களிலிருந்து வடிந்த இரத்தத்தைத் தமது கைகளிலும் முகத்திலும் தடவிக் கொண்டார்.

“இரத்தம் அதிகமாக வடிவதால் என் முகம் வெளுத்து விடும். ஆகையால், இரத்தத்தைத் தடவுகிறேன். மரணத்திற்கு அஞ்சுவதால் முகம் வெளுத்து விட்டது என்று மக்கள் நினைத்துவிடலாகாது என்றே இவ்வாறு செய்கிறேன்” என்று விளக்கஞ்செய்தார்.

அவருடைய கண்கள் பிடுங்கப்பட்டன! உடனே, அங்கிருந்த ஜனத்திரளில் பெருங்கூச்சல் கிளம்பியது.

அதற்கப்பால், அவரது நாவை அறுக்க ஆயத்தஞ் செய்யப்பட்டது. கொஞ்சம் தாமதிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

“இறைவனே! உனக்காகவே இந்த மக்கள் என்னை இவ்வாறு துன்பப்படுத்துகிறார்கள்! உன்னுடைய அருளையும் அன்பையும் இவர்களிடமிருந்து பிடுங்கிக்

கொள்ளாதே! ஏனென்றால், இந்த மக்கள் உன்னுடைய ஷரீஅத்திற்காகவே இத்தகைய துன்பம் கொடுக்கிறார்கள்!" என்று ஆண்டவனிடம் பிரார்த்தித்தார்.

ஹஸ்ரத் மன்ஸூர் ஹல்லாஜ் ரஹ்மத்துல்லாஹி அலைஹியின் ஆவி பிரிந்தது.

"அனல் ஹக்!" என்ற சப்தம் கிளம்பியது.

"இதென்ன புதுமை! அவர் உயிருடன் இருந்த நிலைமையைவிட இப்பொழுது அதிக பேராபத்தாகிவிட்டதே!" என்றார்கள்.

உயிர் உடலைவிட்டுப் பிரியும்பொழுது அவரது உடலிலிருந்து இரத்தம் பூமியின்மீது சொட்டுச் சொட்டாக விழுந்துகொண்டிருந்தது. அந்த இரத்தத் துளிகள்,

"அனல் ஹக்!" என்ற வடிவத்திலே பூமியில் விழுவதைப்போன்று சித்திரம் வரைந்தன. அதிலிருந்தும்,

"அனல் ஹக்!" என்ற குரல் கிளம்பியது.

அவரது உடலை நெருப்பில் இடுமுன் ஒவ்வொரு மயிர்க்காலிலிருந்தும்,

"அனல் ஹக்!" என்ற குரலே கிளம்பியது. எரித்துச் சாம்பலானபிறகும், சாம்பலிலிருந்தும் அதே சப்தம் வந்துகொண்டிருந்தது. ஆற்றில் அந்தச் சாம்பல் போடப்பட்டபொழுது, ஆற்று நீர் பொங்கி எழுந்தது. ஆற்றிலிருந்தும், "அனல் ஹக்!" என்ற சப்தம் வந்தது. ஆறு பொங்கியவுடன் பக்தாத் நகரம் அழிந்துவிடுமென்று மக்கள் அஞ்சினார்கள்! வெகு நேரத்திற்குப்பிறகு நீரின் கொந்தளிப்பு குறைந்தது.

# 14. பொதுமக்கள், ஸூபிகள் அபிப்பிராயம்

## ஞானிகளின் மதுர மொழிகள்

"நீ உனது முகத்தைக் காட்டினதில் பக்தருடைய வாழ்க்கைத் தோற்றம் நிற்காமல் அழிந்தது. சூரியனுகிய தடாகத்தைக் கண்டதும் பனிக்கட்டியின் உருவம் தெரியாமல் மறைந்தது."
—*அமீர் குஸ்ரூ (ரஹ்)*

"அவர் எப்படி இருப்பாரெனின், அவரது முகம் நண்பனை நோக்கி இருக்கும். இவர் எப்படியிருப்பாரெனின் இவரது முகம் நண்பனது முகமாகவே இருக்கும்."
—*மஸ்னவீ* 1 : 200.

(ஞானசாகரத்தில் குறைவாக மூழ்கியவரது திகைப்பு எத்தகையதென்றால் தேடுவோனுக்கும் தேடப்படும் பொருளுக்குமிடையில் வேறுபாடு உண்டு. ஆனால், இரண்டாவதான ஞான சமாதியோடுகூடிய திகைப்பிலே, அதாவது பூரணமாக ஞான சாகரத்தில் ஆழ்ந்திருக்கும் திகைப்பிலே, நாட்டம், நாடுவோன், நாடப்படும் பொருள் என்ற வேறுபாடுகள் ஒன்றுமே கிடையாது).

"எத்தகைய தேட்டம்? எந்தவிடத்துத் தேட்டம்? எதற்காகத் தேட்டம்? நாமிருந்தால் அவனில்லை, அவனிருந்தால் நாமில்லை."

"எப்பொழுதேனும் மறைந்திராதது எதைப் பிரத்தியட்சப்படுத்தும்? எப்பொழுதேனும் பிரிந்திராதது எப்படிச் சந்திக்கும்?" —*மௌலானா இஸ்மாயில் மீரட்டி (ரஹ்)*

"என்னுடைய இருக்கை சென்றது. அவனுடைய சிந்தனையே நின்றது. இப்போது நீ பார்க்கின்ற இவன் நானல்ல. ஆனால், அவனேதான்." —*அமீர் குஸ்ரூ (ரஹ்)*

"உன் தோற்றம் மிக அதிசயமானது! ஏனென்றால், அதனால் என் தோற்றம் அடங்கிவிடுகிறது. நீயே பேசும் சக்தி பெறுகின்றாய். எனது பேச்சு நின்றுவிடுகிறது."

—ஷெய்க் ஸஅதீ ஷீராஸீ (ரஹ்)

"மதுரமான தேனை விட்டுப்பிரிந்த துர்ப்பாக்கியமுள்ள மெழுகைப்போல் அந்த தேனினும் இனிய மொழியாளின் (அல்லாஹ்வின்) பிரிவாற்றாமையால் ஒவ்வோர் இரவும் விடியும்வரை வெந்துபோகிறேன்."

—மௌலானா ஜாமீ (ரஹ்)

ஹஸ்ரத் மன்ஸூர் ஹல்லாஜைப்பற்றிப் பொதுமக்களின் அபிப்பிராயமும் அவர் நிலைமையை நன்கு அறிந்துகொண்ட ஞானிகளின் அபிப்பிராயமும் எவ்வாறு இருந்ததென்று ஆராய்வோம். உலகினிலே இருந்துகொண்டு உலக மக்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளாத உயர்ந்த மனிதரை உலகத்தார் பழிப்பார்கள் என்பதும் பழித்தபிறகே ஏற்றுக்கொள்வார்கள் என்பதும் நமது ஆராய்ச்சியின் முடிவாக அமையும்.

ஹஸ்ரத் மன்ஸூரை அவர் காலத்திய பொதுமக்கள் 'காபிர்' என்றார்கள். இன்னும் எத்தனையோ வசைமாரி பொழிந்தார்கள். ஆனால், அக்காலத்திலிருந்த சில ஞானாசிரியர்களும், தஸவ்வுப் கலையில் தேர்ந்தோரும் அவரை நிராகரித்தார்கள். எனினும், பூர்ண ஆத்ம அறிவுத் துறையிலுள்ள ஸூஃபிகள் அவரைப் புகழ்ந்திருக்கிறார்கள். மேலும், அவரை ஒரு புனிதத் தலைவர் என்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஹஸ்ரத் ஷெய்க் அபூ பக்ர் ஷிப்லி ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்னும் பெரியார்,

"ஒரு சமயம் நான் மன்ஸூரைக் கனவில் கண்டேன். "பரிசுத்தமான அல்லாஹ்விடம் உமது நிலைமை எவ்வாறு ஆயிற்று?" என்று கேட்டேன். மன்ஸூர், மறுமொழியாக, "ஆண்டவன் என்னை ஸித்திகீன்களின் வரிசையில் வைத்து, எனக்கு மேன்மை அருளினான்" என்றார். அதற்கப்பால் நான் அவரிடம், "உங்களுக்கு சாதகமாகவும் பாதகமாகவும் இருந்தார்களே! அவர்கள் நிலைமை என்ன?" என்று கேட்டேன். இந்தக் கேள்விக்கு அவர், "இந்த இரண்டு கட்சிகளைச் சேர்ந்தோர்மீதும் ஆண்டவன் கருணைபுரிந்தான். ஏனென்றால், இரண்டு கட்சிகளும் வெகு நெருக்கடியான நிலைமையில் இருந்தன. என்னை அறிந்துகொண்ட குழு என்னை ஆதரிப்பதைத் தவிர, வேறுவழியில்லாத நிலைமையில் இருந்தது. ஆனால், என்னை அறிந்துகொள்ளமுடியாத குழுவோ ஷரீஅத்தின்படி நடப்பதைத் தவிர, வேறுவழியில்லாத நிலைமையில் இருந்தது" என்று விளக்கம் கூறினார்.

இன்னொரு மகான் ஹஸ்ரத் மன்ஸூரைக் கனவில் கண்டார். இறுதித் தீர்ப்பு நாளன்று மன்ஸூர் நிற்கிறார். தலை இல்லாத உடலுடன், தமது கையில் இறைகாதல் மதுக்கோப்பையுடன் நிற்கிறார். "இதென்ன நிலைமை?" (ஹால்) என்று அந்த மகான் கேட்கவும், மன்ஸூர்,

"வஹ்தத் (இறை ஒருமை) என்னும் கோப்பையில் உள்ளதை தலை இழந்தோருக்குக் கொடுக்கிறேன்" என்றார்.

ஷெய்க் அபூ ஸயீத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறுகிறார் :—

"மன்ஸூர் வெகு உயர்ந்த நிலைமையில் இருந்தார். அவர் காலத்திலே, அந்த நிலைமையில் அவருக்கு ஒப்

பாரும் மிக்காரும் இல்லாமல், ஒரு தனிச்சிறப்புடன் அவர் விளங்கினர்."

"மன்ஸூர் மிகவும் பரிசுத்தமானவர். பயபக்தி உள்ள முத்தகீ. இவரது வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியும் இறைவனை வணங்குவதிலும், நோன்பு நோற்பதிலும், இறை நாமத்தையும் இறைவனுடைய ஸிபாத் பண்புகளையும் உச்சரிப்பதிலும் கழிந்தது. இஸ்லாமிய அறநெறியான ஸுன்னத்தின் பிரகாரமே நடந்தார். இஸ்லாமிய கடமைகளை ஒழுங்காகப் பின்பற்றிச் செயலாற்றினர். எம்பெருமானர் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் அவர்களது புனிதத் தோழர்களும் நடந்த நெறியிலே நடந்தார். ஞான மார்க்கத் (மஅரிபத்) திலே சென்றுகொண்டிருந்தார். ஆனல், உணர்ச்சி ததும்பி, பீறிட்டுக்கொண்டு வெளிக்கிளம்பி, ஸூபிகளது முறைக்கு விரோதமான ஒரு வார்த்தை வந்துவிட்டது! இதனல், இவரை 'காபிர்' என்று கூறமுடியாது. தவ்ஹீத் என்பதின் மணம் அணுவளவேனும் கமழும் மூளையுள்ள மனிதனுக்கு இவரைக் குற்றவாளி என்று கூறும் எண்ணம் வராது. மன்ஸூரைக் கெட்டவர் என்பவன் தவ்ஹீதின் இரகசியத்தை அறியாதவன்" என்று ஹஸ்ரத் காஜா பரீதுத்தீன் அத்தார் ரஹ்மத்துல்லாஹி அலைஹி விளக்கஞ் செய்கிருர்.

மவ்லானு ஜலாலுத்தீன் ரூமியும் தமது அபிப்பிராயத்தைத் தமது மஸ்னவியில் வெளியிடுகிருர்:—

"நானே (இறைவன்) "ஹக்!" என்று கூறிய பிர்அவ்ன் அரசன் இழிவடைந்தான். ஆனல், "அனல் ஹக்!" என்று கூறிய மன்ஸூர் ஹல்லாஜ் உயர்வு பெற்ருர். பிர்அவ்ன், பிரயோகித்த "நான்" என்னும்

பதம், ஆண்டவனது சாபத்துடன் தொடர்பு கொண்டது. ஆனால், மன்ஸூர் கூறிய, "நீரன்" என்னும் சொல்லோ, இறை அருள் நிறைந்தது. ஏனென்றால், பிர்அவ்ன் ஒரு கல்லுக்குச் சமமானவன். ஆனால், மன்ஸூரோ மாணிக்கம் போன்றவர். பிர்அவ்ன், ஆண்டவனது (நூர்) ஜோதியின் விரோதி. ஆனால், மன்ஸூர் அதன் காதலர். "அனல் ஹக்!" என்ற மன்ஸூருடைய வசனம் ஞான வசனமாகும். எளிதான வார்த்தையல்ல. அல்லாஹ்வின் (நூர்) ஜோதியுடன் ஓர்மைப் படுத்துவதைச் சுட்டிக்காட்டுவதாகும்."

ஹஸ்ரத் பரீதுத்தீன் அத்தார் ரஹ்மத்துல்லாஹி அலைஹி, "தத்கிரதுல் அவ்லியா" என்னும் நூலில் எழுதுவதாவது:—

"இவர் (ஹஸ்ரத் மன்ஸூர்) அல்லாஹ்வின் பாதையில் (பீ ஸபீலில்லாஹ்) கொலை செய்யப்பட்டவர். அவரது நிலைமை மிகவும் விசித்திரமாயிருந்தது. அவரது நிலைமை ஒரு தனிச் சிறப்புவாய்ந்தது. எப்பொழுதும், இறையின்ப மதுவை உண்டு, மதங்கொண்டு, உணர்வற்றிருந்தார். இந்தப் புனித இறைகாதலர் (ஆஷிக்) அக்காலத்தில் பெருமை பெற்றவர்......ஆதி முதல் அந்தம்வரை அவரது நிலைமையின் அஸ்திவாரம் துன்பங்களிலே இருந்தது. சிலர் அவரை எதிர்த்தார்கள். சிலர் அவரைப் பெரிய மஷாயிகீன்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ளுகிறார்கள். சிலர் அவரைப்பற்றி மௌனம் சாதிக்கிறார்கள். ......ஹஸ்ரத் உபைதுல்லாஹ் கபீப் (Khafeef) இவரை 'ஆலிம் ரப்பானீ' என்று ஏற்றிப் போற்றுகிறார். ஹஸ்ரத் ஷிப்லியும் இவரைப் புகழ்கிறார். எனவே, இவர் சபிக்கப் பட்டவராக இருந்தால், இந்த மகான்கள் இவரைப் புகழ்ந்திருக்க மாட்டார்கள்."

ஹஸ்ரத் அபூ பக்ர் ஷிப்லி ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறுகிறுர் :—

"நானும் மன்ஸூரும் ஒன்றுதான். என்னைப் பைத்தியக்காரன் என்று கருதி, மக்கள் என்னை விட்டு விட்டார்கள். ஆனுல், அவரை அறிவாளி என்று நினைத்துக் கொன்றுவிட்டார்கள்."

"மன்ஸூர் (இஷ்க்) இறைகாதல் பாதையிலே மார்பு தட்டிப் புறப்பட்டார். "அனல் ஹக்!" என்று முழக்கஞ் செய்தார். இஸ்லாமிய உலகைத் திடுக்கிடச் செய்தார். இறை வணக்கத்தாலும், அருளாலும், அவர் அற்புதத் தன்மை பெற்ருர். இறைகாதலின் சுவாலையின் ஒரு பொறியாகவே அவரது ஆத்மா அமைந்திருந்தது. அது அவரது உடலைப் பற்றிக்கொண்டது. அவரது அகநிலை யானது, மௌனம் என்பதைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்தது. நூற்றுண்டுகளாக மறைத்துவைக்கப் பட்டிருந்த தரீகத் என்னும் ஞான மார்க்கத்தின் இரகசியத்தை வெளிப்படுத்தி விட்டார். ஞான மார்க்கத்தில் முயற்சிசெய்யும் ஒவ்வொருவருக்கும் மன்ஸூரைப் போன்ற நிலைமை ஏற்படுவது இயல்பே, என்று ஆழ்ந்து அமர்ந்து ஆராய்ச்சி செய்வோர் ஒப்புக்கொள்ளாமல் முடியாது. ஏனென்ருல், புகாரீ, மிஷ்காத் என்ற ஹதீது நூல்களில் "திக்ருல்லாஹ்"—அல்லாஹ்வை நினைத்தல்-என்ற அத்தியாயத்திலிருந்து ரூபிக்கப்படுவதாவது, ஒரு வலியுல்லாஹ், அளவுக்கதிகமான நபில் தொழுகை தொழுதால், ஒரு நிலைமை ஏற்படுகிறது. அந்த நிலைமையின் காரணமாக, அல்லாஹ் அந்த வலியுல்லாஹ்வின் கை, கால், கண், காது, ஆகிவிடுகிருன். இந்தப் பரவச நிலைமையின் உதவியால் ஸாலிக் என்ற ஞானியானவன், தவ்ஹீத் (ஏகதெய்வம் – ஒருமைப் படல்) என்ற கடலில் மூழ்கி

விடுகிறான். ஒவ்வொரு பொருளையும் வஹ்தத்துல் உஜூத் (தவ்ஹீத் - அத்வைதம்) என்பதின் வண்ணத்திலேயே பார்க்கின்றான். இந்த இடத்தில் - இந்த நிலைமையில் - ஸாலிக் உடைய உதடுகளில் மௌனம் என்ற முத்திரை இடப்படவேண்டியது மிக மிக அவசியமாகும். மன்ஸூர் இந்த நிலைமையை அடைந்தார். ஆனால் போர்வையை - முக மூடியை - எடுத்துவிட்டார். இரகசியத்தை வெளிப்படுத்தியவுடன், மக்கள் நாலாபக்கங்கலிருந்தும் அவர்மீது பாய்ந்தார்கள். ஆனால், காலம் செல்லச் செல்ல, தீனை ஆதரிப்பவர்களது கோபம் தணிந்துகொண்டே வந்தது. இவ்வாறு, குறைந்து குறைந்து, இறுதியாக வந்த ஸூபிகள், மன்ஸூரின் உயர்வை ஒப்புக்கொண்டார்கள். அவரது புகழானது உலக முடிவுநாள்வரை இருக்கும்படி செய்துவிட்டார்கள்.”

என்று ஷெய்க் குலாம் முஹம்மத் அஹமத் என்பவர் தமது “அவ்லியா அல்லாஹ்” என்ற நூலில் எழுதுகிறார்.

இனி, கீழ்வருவனவும் நமது ஆராய்ச்சிக்கு உரியனவாகும்.

அலம்தற கய்ப கலகல்லாஹு—ஸப்அ
ஸமாவாத்தின் த்திபாகன்

“ஏழு வானங்களையும் ஒரேவிதமாய் அல்லாஹ் எவ்வாறு படைத்தான் என்பதை நீங்கள் பார்ப்பதில்லையா?”
—(குர்ஆன் 71:15 நூஹ்)

என்ற குர்ஆன் வசனத்தின் விரிவுரை தருவேனாயின் நீங்கள் என்னைக் “கல்லால் எறிந்து கொன்றுவிடுவீர்கள்” என்று ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) கூறுகிறார்.

"நான் அல்லாஹ்வைத் தவிர வேருென்றையும் பார்க்கவில்லை" என்றும் "என் உள்ளே இருக்கிற விஷயத்தை நான் வெளியிடுவேனுனுல், ஆழமான கிணற்றில் விடப்பட்ட கயிறு துடிப்பதைப்போல நீங்களும் துடிப்பீர்கள்" என்று ஹஸ்ரத் அலி (ரலி) கூறுகிருர்கள்.

"அல்லாஹ், தன்னையே வணங்குவோனும் வணங்கப் படுவோனுமானவன்" —(ஹஸ்ரத் கௌதுல் அஃலம்)

"என் அங்கியில் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் இல்லை." —(ஹஸ்ரத் ஜுனைத் பக்தாதீ)

"நானே பேசுகிறவன். நானே கேட்கிறவன். இரு லோகங்களிலும் வேருெருவர் யார்?"

"நானே ஸுப்ஹான்—(பரிசுத்தமான இறைவன்!) என் கீர்த்தி எவ்வளவு பெரியது!" —(ஹஸ்ரத் பாயஸீத்)

"நானே உங்கள் ரப் (இறைவன்!) எனக்குக் கீழ்ப் படியுங்கள்!" —(ஹஸ்ரத் மஅரூப் கர்கீ)

"அனல் ஹக்! (நானே மெய்ப்பொருளாகிய இறைவன்.)" —(ஹஸ்ரத் மன்ஸூர் ஹல்லாஜ்)

"ஸூபியின் அறிவு இறைவனுடைய (ஹக் உடைய) அறிவில் மறைந்துவிடுகிறது. இதை ஒரு முட்டாள் எப்படி அறிய முடியும்?" —(மௌலானு ஜலாலுத்தீன் ரூமி)

"ப ஹுவ மஅகும் அய்ன மா குன்தும்—நீங்கள் எங்கிருந்தாலும், அவன் (அல்லாஹ்) உங்களுடன் இருக்கிருன்." —(குர்ஆன் 57 : 4 இரும்பு)

"ப அய்ன மா தவல்லு ப தும்ம வஜ்ஹுல்லாஹ்-நீ எங்கு திரும்பினுலும் அங்கு அல்லாஹ்வின் முகமே."
—(குர்ஆன் 2 : 115 பக்ரா)

"குல்லு ஷைய்இன் ஹாலிகுன் இல்லா வஜ்ஹஹு —(அல்லாஹ்) வைத் தவிர எல்லாம் அழிந்துபோகும்."
—(குர்ஆன் 28 : 88 கஸஸ்)

"நஹ்னு அக்ரபு இலைஹி மின் ஹப்லில் வரீத்-அவன் (மனிதன்) உடைய உயிர் நரம்பைவிட நாம் அவன் சமீபத்தில் இருக்கிறோம்." —(குர்ஆன் 50 : 16 காப்)

ஒருசமயம் மாலிக் காபூர் ஒரு பகீருக்கு அன்பளிப்பு அனுப்பினார். அந்த பகீர்,

"(அல்லாஹ் அல்லாத) பிறரிடம் நான் எதையும் பெற்றுக்கொள்ளமாட்டேன்" என்றார். அதைக்கேட்ட மாலிக் காபூர்,

"ஸுப்ஹானல்லாஹி மா பிஸ்ஸமா வாதி வல் அர்ல். ப அய்னல் காபூர் ?—வானங்களிலும் பூமியிலும் இருப்பனவெல்லாம் அல்லாஹ்வுடைய கீர்த்தியையே வெளியாக்குகின்றன. காபூருக்கு அதில் இடம் ஏது ?"—என்று சொல்லியனுப்பினார்.

ஒப்புவமை செப்பரிய கர்ப்பூர தீபமென
ஒன்றுவதெக்காலமோ.
உனக்குள் நானாகவும் என்றனக்குள் நீயாகவும்
எனக்குள் நானுனக்குள் நீ என்ற தாய் நின்ற
ஐயன்குணங் குடியானை யன்றிவே றுண்டென்று
ளாய்ந்து பார்த்தேன்.
ஐயன்குணங் குடியானை யன்றிவே றென்றுமென்னு
ளாய்க் காணேன்.
ஐயன்குணங் குடியானே யானேயென் றறிந்த
பின்னென் அறிவாய் நின்ற
ஐயன்குணங் குடியானே அதிமோகத் திருநடன
மாடுவானே.—(குணங்குடி மஸ்தான்)

மேற்கூறப்பட்ட வாசகங்களிலிருந்து ஒரு திட்டமான முடிவுக்கு வந்து, அந்த நிலையும் ஹஸ்ரத் மன்ஸூர் ஹல்லாஜ் உடைய நிலையும் ஒன்றுதான் என்று நினைக்கலாமா ?

"வப்தகூ இலைஹில் வஸீலத—(அல்லாஹ்வை) அணுகும் வகைகளைத் தேடுங்கள்"–(குர்ஆன் 5 : 35 மாயிதா)

என்ற திருமறை வசனமும் ஒவ்வொருவரும் ஆராய்ந்து அதன்படி நடக்கவேண்டியதல்லவா ?

இன்னொரு விஷயம் ஆராயவேண்டியதாகும். அதாவது, ஸிபாத் என்னும் பண்புகளை மனிதன் (இன்ஸான்) தனதென்று அழைத்தால் அடியான் (அப்த்—பந்தா) ஆகிறான். இல்லையேல், ஸிபாத்கள் அல்லாஹ்வுடையவையாகும். அத் தன்மையில் இன்ஸான் ஒன்றுமில்லாத அதம் ஆகின்றான்.

இந்த ஞானப்பாதையில் நடக்கும், 'ஸாலிக்' என்ற ஞானமாணுக்கன், படிப்படியாக உயர்ந்து கடைசிப் படியில் நின்று, தாத் (Self) உடைய கண்ணாடியின் பக்கம் திரும்புவானானால், அப்பொழுது "அனல் ஹக் !"–நானே அல்லாஹ் ! என்கிறான்.

கடலிலுள்ள ஒரு நீர்க்குமிழியானது தன்னைக் கடலின் ஓர் அணுவாகக் கருதும்பொழுது, "நானே கடல்" என்கிறது.

தன்னையே தான் தெரிந்துகொண்ட குமிழியானது அந்த நிலைமையில், கடலை, "அதுவே கடல்" என்று பிரித்துக்காட்டுகிறது.

தன்னை 'அதம்' என்ற தனித்த நிலைமையில் கண்டவன் "ஹுவல் ஹக் !—அவனே இறைவன் !" என்று பிரித்துக் கூறுகிறான்.

ஞான மார்க்கத்தில் செல்லும் அடியான் (ஸாலிக்) இனி, இறைவனுடைய பண்பு (ஸிபாத்)களில் ஒன்றில் மறைந்துவிடுகிறான். அந்தப் பண்பானது, "பேச்சு" என்ற பண்பாக இருந்தால், அடியான் சிலசமயம் ஆண்டவனுடைய பேச்சின் மூலமாகப் பேசுகிறான். அல்லது, ஆண்டவன் சிலசமயம் அடியானுடைய நாவின் மூலமாகப் பேசுகிறான்.

ஸாலிக் தனது தாத்தை அழித்த நிலைமையில், "மஜ்ஸூப்", அதாவது, அல்லாஹ்விலே மூழ்கியவன்—தோய்ந்தவன்—இறைகாதல் பைத்தியன் — ஆகின்றான். இவ்வாறு தன்னில் (பனா—Fana) அழிவையும், இறைவனில் (பகா—Baqa) நித்திய-நிரந்தரத்தையும் கண்டவன், "அனல் ஹக்!" என்கிறான்.

"நான் அல்லாஹ்வைத் தவிர வேறு எதையும் பார்க்கவில்லை" என்று ஹஸ்ரத் அலி (ரலி) கூறினார்.

இந்த உண்மையை எல்லோரும் அறிந்துகொள்ள முடியாது.

உண்மை என்ன ?

மேற்கூறப்பட்ட அபிப்பிராயங்களிலிருந்தும், மேற்கோள்களிலிருந்தும் நாம் ஒரு முடிவுக்கு வரலாம். அதாவது, ஹஸ்ரத் மன்ஸூர் ஹல்லாஜ் என்ற பெரியாருக்கு இவ்வாறு சிறிதளவு கெட்டபெயர் வருவதற்குக் காரணஸ்தர், ஒரு பக்கம் அவரை விடாப்பிடியுடன் எதிர்த்தோரும், இன்னொரு பக்கம் அவரைப் பின்பற்றியோரும் சீடரும் ஆவர் என்று கூறவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. அவருடைய சீடர்கள் அவரது மரணத்திற்குப்பிறகு எத்தனையோ விதமான விபரீதக் கொள்கைகளை உற்பத்தி செய்துவிட்டார்கள். அளவுகடந்து அவரைப் புகழ்ந்து அவருக்கு இழிவு தேடினார்கள்.

பிறகு, இந்தக் கொள்கைகளைப் பின்பற்றிய ஒரு குழு கிளம்பியது. அது ஜிந்தீக் (Zindeeq) என்று அழைக்கப்படுகிறது. இந்தக் குழு பெரும்பாலும் இஸ்லாமிய கொள்கைகளுக்கு விரோதமாக நடந்தது. "கியாமத்தும் இல்லை, அல்லாஹ்வும் இல்லை" என்றது.

தெய்வ நிந்தனை செய்து, ஹுலூல் (ஊடே நுழைதல்), இத்ஹாத் (இரண்டறக் கலத்தல் – ஐக்கியம்) சம்பந்தமாக இந்தக் கொள்கையாளர் பிழையான பாதையில் சென்றார்கள். ஹஸ்ரத் மன்ஸூரைப் பின்பற்றுகிறோமென்று மரண தண்டனை அடையவும், நெருப்பில் போடப்பட்டுச் சாம்பலாகிப் போகவும் பிரியப்பட்டார்கள், இத்தகைய செயல்களைப பெருமைக்கு உரியனவாகவும் அவர்கள் கருதினார்கள்.

இந்த மதியீனர்கள் இவ்வாறு செய்வதைக் கண்ட பொதுமக்கள், "இதற்கெல்லாம் மூல கர்த்தா மன்ஸூர்தானே!" என்று நினைத்தார்கள். எனவே, மன்ஸூரை நிந்தித்தார்கள். அவர்மீதே குறை கூறினார்கள். "இந்த மக்கள் பின்பற்றுவதெல்லாம் மன்ஸூரின் போதனைகளே!" என்று கூற ஆரம்பித்தார்கள்.

ஆனால், இந்த அறிவிலிகள் செய்த பிழைகளை எல்லாம் பகுத்தறிவுடன் ஆராய்வோர் ஹஸ்ரத் மன்ஸூர் மீது சுமத்தமாட்டார்கள். அவர் சென்ற வழி வேறு.

ஹஸ்ரத் மன்ஸூர் சாதாரண மனிதரல்லர். பெரிய அறிவாளி. ஞானசிரியர். ஷரீஅத், தரீகத், மஅரிபத், சம்பந்தமான இரகசியங்களைப்பற்றி ஆழ்ந்த கருத்துள்ள பெரிய நூல்களை அவர் எழுதியிருக்கிறார். நூலாசிரியர் மட்டுமல்ல, ஒரு சிறந்த கவிஞருமாவார். இலக்கண இலக்கியங்களில் தனிச் சிறப்புப் பெற்றவர். இவரது வசனங்களெல்லாம் முத்துக்கள் போன்று அமைந்திருக்கின்றன.

# 15. உயர் வசனங்கள்

1. உலக இச்சைகளைத் துறத்தல், உடல் மூலமாகச் செய்யும் கடுமையான இறைவணக்கமாகும். ஆகிரத் என்ற மறுஉலக இன்பங்களைத் துறத்தல் உள்ளத்தின் மூலமாகச் செய்யும் கடுமையான இறைவணக்கமாகும்.

2. அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையில் இரண்டே இரண்டு அடி தூரம்தான் இருக்கிறது. சட லோகமான துன்யாவிலிருந்து ஓர் அடி எடுத்து வையுங் கள். அடுத்த அடியில் ஆன்மலோகமான உக்பாவிலிருந்து நமது இறைவனுகிய மௌலாவைப் பெற்றுவிடுவோம்.

3. "ஸூபி" என்பவன் யார்? அவன் இறைவ னுடைய பண்பு (ஸிபாத்து)களில் ஒன்ருகிவிடுகிருன். அவன் ஒருவரையும் அறியமாட்டான். வேருெருவரும் அவனை அறியமாட்டார்கள்.

4. நபிமார்களைத் தவிர மற்றெல்லோர்மீதும் பரவச நிலை (ஹால்) உண்டாகும். இந்தப் பரவசநிலையால் அவர்களது நிலைமை மாறிவிடுகிறது.

5. சுவாசத்திற்கு உயிர் காற்று. உள்ளத்திற்கு உயிர் மெய்ப்பொருள் (ஹக்). உயிருக்கு உயிர் ஹகீகத்.

6. ஆரிப் – ஞானி என்பவனுக்குக் காலம் கிடை யாது. காலத்தின் கர்த்தாவின் பண்பே காலம் என்பது. எனவே, தனது பண்பில் இளைப்பாறுவோனை ஆரிப் என்று கூறமுடியாது.

7. "மஅரிபத்" என்ற நிலையை அடியான் அடை யும்பொழுது அவனுக்கு மறைவிடத்திலிருந்து இல்ஹாம்

வருகிறது. இறைவன் (ஹக்) தவிர வேறெந்த விஷய மும் அவன் மனதில் வராது.

8. தவக்கல் (பரஞ்சாட்டல்) என்பதன் பொருளாவது ஊரில் நம்மைவிட உணவுக்கு உரியவன் ஒருவன் இருப் பானையின் நாம் சாப்பிடக்கூடாது.

9. உலகப்பற்றை விடல் நப்ஸின் ஜுஹ்த் (Zuhd = பயபக்தி மார்க்கம்) ஆகும்.

ஆகிரத்தின் பற்றை விடல் மனதின் ஜுஹ்த் (வணக்க முறை) ஆகும்.

"தான்" என்னும் பற்றை விடல் உயிரின் ஜுஹ்த் ஆகும்.

10. ஸப்ர் (Sabr = பொறுமை) என்பதன் பொருளா வது, தனது கை கால்களை வெட்டும்படி கொடுக்க வேண்டும். தூக்குமரத்தில் ஏறி, மூச்சுப் பேச்சில்லாமல் மௌனமாய் இருக்கவேண்டும்.

நீ உன்னைக் கவனமாகப் பார்த்துக்கொள். இது பெரிய வீரர்களின் செயலாகும்.

12. இறைவனுக்கு அடிமையானவன் ஆற்ற வேண்டிய கடமைகளையெல்லாம் செய்தவன் சுவாதீன மடைவான்.

13. எல்லாப் படைப்புகளையும் பனா (Fana) என்ற உணர்வில்லாத ஸ்தானத்தில் பார்ப்பதே மஅரிபத் ஆகும். லாயிலாஹா இல்லல்லாஹ் — அல்லாஹ்வைத் தவிர வேறொரு தெய்வம் இல்லை — என்பதை செயலாற்றும் முறை இதுதான்.

14. நாவால் சொல்லும் சொல்லானது மனதைக் கொன்றுவிடுகிறது.

"அதிகமாகப் பேசுவதால் மனம் பிணமாகிவிடுகிறது.
—(ஹதீஸ்)

15. எப்பொழுதும் நாடு பிடிக்கும் ஆசையில் ஓர் அரசன் இருப்பதுபோல, ஆண்டவனுடைய துன்பங்கள் மீது நாம் எப்பொழுதும் ஆசை வைக்கிறோம்.

"எவனுக்கு நன்மை செய்ய அல்லாஹ் நாடுகிறானோ அவனைச் சோதனைக்குள்ளாக்குகிறான்." —(ஹதீஸ்)

16. பக்ர் (Faqr) என்றால் இறைவனைத் தவிர வேறொன்றையும் நம்பி இராத நிலைமை.

## 16. அற்புதச் செயல்கள்

ஹஸ்ரத் மன்ஸூர் ஹல்லாஜ் மூலமாகப் பல அற்புதச் செயல்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவற்றில் இரண்டொன்றை இங்கு குறிப்பிடுவோம்.

**காட்டில் சீடருக்கு உணவு கொடுத்தல்**

ஒரு சமயம் அவர் தமது நானூறு சிஷ்யருடன் ஹிஜாஸுக்குச் செல்லும்பொழுது காட்டில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தார். வழியில் மனித சஞ்சாரமே இல்லாமலிருந்தது. எல்லோரும் உணவில்லாமல் பட்டினியாயிருந்தார்கள். இவ்வாறு பல நாட்கள் கடந்தன. பசியால் வாடினார்கள். இறுதியாக, சிஷ்யர்கள் ஒன்றுகூடி ஹஸ்ரத் மன்ஸூரிடம் சென்று, "நாங்கள் பசியால் வாடுகிறோம், எங்களுக்கு சூடான ஆகாரம் வேண்டும்!" என்று கேட்டார்கள்.

அவர்களை வரிசையாக உட்காரும்படி ஹஸ்ரத் மன்ஸூர் உத்தரவிட்டார். அவர்களும் அவ்வாறே உட்கார்ந்துகொண்டார்கள். ஹஸ்ரத் தமது கையைப் பின்

பக்கம் கொண்டுபோனார். அதை முன்பக்கம் கொண்டு வந்தபொழுது, அதில் இரண்டு சூடான ரொட்டிகளும் கறியும் இருந்தன. அதை ஒரு சிஷ்யருக்கு முன் வைத்து விட்டார். இவ்வாறு ஒவ்வொருவருக்கும் வைத்தார். எல்லோரும் சாப்பிட்டார்கள்.

### புதிய பேரீச்சம் பழம் அளித்தல்

ஒருநாள், "எங்களுக்குப் புதிய பேரீச்சம்பழம் வேண்டும்" என்று சீடர்கள் விண்ணப்பஞ் செய்தார்கள், ஹஸ்ரத் மன்ஸூர் எழுந்தார். நின்றுகொண்டார்.

"மரத்தைக் குலுக்குவதைப்போல என்னைப் பிடித்துக் குலுக்குங்கள்" என்றார், அவர்கள் அவ்வாறே செய்தார்கள். அவரது உடலிலிருந்து பேரீச்சம் பழங்கள் உதிர்ந்து கீழே விழுந்தன. அனைவரும் அவற்றைப் பொறுக்கிப் புசித்தார்கள்.

### அத்திப் பழம் வழங்கல்.

ஒரு சமயம் ஹஸ்ரத் மன்ஸூர் பிரயாணஞ் செய்து கொண்டிருக்கையில் அவரது மாணாக்கர்கள் தங்களுக்கு அத்திப்பழம் வேண்டுமென்று கேட்டார்கள். ஹஸ்ரத் மன்ஸூர் உடனே தமது கையை நீட்டினார். ஒரு தாம்பாளம் நிறைய அத்திப்பழம் வந்தது. அதை அவர்களிடம் கொடுத்து சாப்பிடச் சொன்னார்.

## 17. இறை காதல்

காதல் கொண்டோரை, "பித்தர்," "பைத்தியக்காரர்," "பாலர்," என்று இந்த உலகம் கூறும். அந்தப் பைத்தியம் பிடித்தோருக்கு எத்தனையோ துன்பங்கள் வரும். உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து நேரும். காதலை, "இறக்கமற்ற வாள்" என்றும்; "கன்னெஞ்சமுள்ள கொலையாளி" என்றும் கூறுவர். அது காதலரின்

உள்ளத்தை எரித்துப் பொசுக்கிவிடும். குடிகெடுத்துவிடும். வஞ்ந்தரத்தின் சிங்கம்போன்று அவ்வளவு பயங்கர மானது. கொந்தளிக்கும் கடலின் நீர்ச்சுழற் காற்று. கரை காணுத கடல். அதன் ஒவ்வொரு அலையும் கூரிய வாள். உயிரை வாட்டும் நெருப்பு. அதன் காயங்களால் நெஞ்சம் புண்ணுகிவிடும். அதன் நேசத்தால் உற்ருர் உறவினருடைய தொடர்பு துண்டிக்கப்பட்டுவிடும். சேர்ந் தார்க்கு களிப்புதவாமல், தனது நெருப்பால் அவர்களைச் சாம்பலாக்கிவிடும். காதலானது சிலசமயம் இடியைப் போல் தலையில் வந்து விழுகிறது. சிலசமயம், வெள்ளப் பெருக்கெடுத்த ஆற்றில் அகப்பட்ட துரும்பைப்போல் அமிழ்த்தி விடுகிறது. துன்பத்தின்மேல் துன்பம் கொடுக் கிறது. சிலசமயம் காதலனைத் தூக்குமேடைக்கும் கொண்டுசெல்லுகிறது. சிலசமயம் வாளால் வெட்டு கிறது. அருள்நிறைந்த அறநெஞ்சத்தையும் ஆட்டி வைக்கிறது. தூய்மையான தோற்றமுள்ளோரையும் ஏமாற்றி விடுகிறது. உலகம் போற்றும் உயர்வுள்ளோரை யும் உச்சத்திலிருந்து தள்ளிவிடுகிறது.

எந்த உள்ளத்தில் காதல் குடிகொண்டதோ அது அதில் ஒன்ருகிக் கலந்துவிடுகிறது. அது எந்த மரத்தின் கொடியாக ஏறுகிறதோ, அந்த மரத்தைப் பற்றிப் பற்றிச் சென்று அதன் ரசத்தை உறிஞ்சிவிடுகிறது.

சிற்றின்ப உலகிலே ஏற்படும் காதலுக்கு இத்தகைய சிறப்பு இருந்தால், பேரின்பக் காதலில் ஏற்படும் அதிர்ச்சி களும் அற்புதத் தோற்றங்களும் அளவு கடந்தன.

இறைகாதல் கொண்டோனை, "இறைவனின் சாயல்" எனலாம். எவ்வாறு அவனது சாயல் அவனை விட்டகலாதோ, அவ்வாறே இந்தத் துறையிலும், "நான்—நீ" என்ற திரை நீங்கியபொழுது,

" அனல் ஹக் !" என்ற குரல் கிளம்புகிறது. அவனே அவனது பெயரைக் கூறுகின்றான் !

"இந்த நிலைமையில் — இந்தப் பரவச நிலையில்— ஹஸ்ரத் மன்ஸூர் ஹல்லாஜ் கூறியதென்ன ? அவரால் கூறப்பட்டது குற்றமா ? ஏன் அவரைத் தூக்கிலிட்டார் கள் ?"—என்று ஒரு பெரியார் கூறுகிறார்.

சாகாமல் செத்து, தூங்காமல் தூங்கி, இரவைப் பக லாக்கி, " நான் " என்னும் சிலையை உடைத்து, வெற்றி பெற்றவனே முஸ்லிம் ஆவான். தன் வணக்கத்தைத் தவிர்த்து, மெய்ப்பொருளின் (ஹக்) வணக்கத்தில் அவன் தன் மனதைச் செலுத்தல் வேண்டும். பாசங்களின் திரை களை நீக்கிப் பார்ப்போருக்கு இறையின்பம் காணப்படும். ஹஸ்ரத் மன்ஸூர் ஹல்லாஜ் போன்றவர்கள் இதை அனுபவித்தார்கள். ஹக்கை,-மெய்ப்பொருளை-மறவாமல், ஒவ்வொரு விநாடியும் வாழ்ந்தார்கள். பேரின்பப் பாதை யில் நடக்கும் பாக்கியம் பெற்றார்கள்.

மண்ணெல்லாம் சன்மார்க்க மலராட்சி வேண்டும்
மார்க்கமெலாம் சன்மார்க்க மணங்கமழல் வேண்டும்
கண்ணெல்லாம் சன்மார்க்கக் காட்சியுறல் வேண்டும்
காதெல்லாம் சன்மார்க்கக் கேள்விநுழை வேண்டும்
பெண்ணெல்லாம் சன்மார்க்கப் பிள்ளைபெறல் வேண்டும்
பேச்செல்லாம் சன்மார்க்கப் பேச்சாதல் வேண்டும்
பண்ணெல்லாம் சன்மார்க்கப் பாட்டிலெழல் வேண்டும்
பரம்பொருளே சன்மார்க்கப் பணிசெயவேண் டுவனே.
(திரு. வி. க.)

இறைவனே ! எங்கள் உள்ளங்களிலே உனது பேரின்பக்காதல் உண்டாகும்படி அருள் புரிவாயாக எங்களை நேரான பாதையில் நடத்துவாயாக ! ஆமீன் !

# அவ்லியாக்கள் சிலர்

| எண் | பெயர் | பிறந்த நாடு | மரணம் ஹி | கி. பி. | மரணமான இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | அபூ ஹாஷிம் ஸூபி (Soofi) (ரஹ்) ... | கூபா (Koofa) | 150 | 767 | |
| 2 | அபூ இஸ்ஹாக் இப்ராஹீம்பின் அத்ஹம் (ரஹ்) ... | பலக் | 161 | 777 | ஸிரியா |
| 3 | அபூ ஸுலைமான் தாவூத் பின் நஸ்ர் தாயி (ரஹ்) ... | இராக் | 165 | 781 | பக்தாத் |
| 4 | அபூ அலீ ஷகீக் பின் இப்ராஹிம் பல்கீ (ரஹ்) ... | பலக் | 174 | 790 | கத்லான் |
| 5 | அபூ அலீ பலீல் (Faleel) பின் அயாஸ் குராஸானீ (ரஹ்)... | மர்வ குராஸான | 187 | 802 | மக்கா |
| 6 | அபுல் மஹ்பூல் மஅரூப் பின் பய்ரோஸ் கர்கீ ரஹ் (Abul mahfool maaroof bin Fairoz karkhi) ... | வாஸித் | 200 | 815 | பக்தாத் |
| 7 | அபூ ஸுலைமான் அப்துர் ரஹ்மான் பின் அத்யா தாரானீ (ரஹ்) ... | தாரான் (திமஷ்க்) | 215 | 830 | தாரான் |
| 8 | அபூநஸ்ர் பஷ்ர் பின் ஹாரிஸ் ஹாபீ (ரஹ்) ... | மர்வ் | 227 | 841 | பக்தாத் |
| 9 | அபூ அப்துல்லாஹ் ஹாரிஸ் பின் அஸத் முஹாஸபீ (ரஹ்) ... | பஸ்ரா | 243 | 857 | பக்தாத் |
| 10 | அபுல் பய்ஸ் நூஃமான் பின் இப்ராஹிம் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) ... | அகிம், எகிப்து | 245 | 859 | காரபா (எகிப்து) |
| 11 | அபூ துராப் அஸ்கர் பின் ஹுஸைன் நக்ஷபீ . | குராஸான் | 245 | 859 | பஸ்ரா |
| 12 | அபூ ஹாமித் அஹ்மத் பின் கிஸ்ர்வியா பல்கீ ... | பலக் | 246 | 860 | பலக் |

| எண் | பெயர் | பிறந்த நாடு | மரணம் ஹி | ஐ.பி. | மரணமான இடம் |
|---|---|---|---|---|---|
| 13 | அபுல் ஹஸன் ஸிர்ரி பின் முப்லிஸ் ஸகதி ... | பக்தாத் | 253 | 867 | பக்தாத் |
| 14 | அபூ யஸீத் தய்பூர் பின் ஈஸா அல் புஸ்தாமீ (Bayazeed Bustami) ... | புஸ்தாம் | 261 | 847 | புஸ்தாம் |
| 15 | அபூ ஹபஸ் உமர் பின் மஸ்லமா ஹத்தாத் நீஷாபூரி ... | நீஷாபூர் | 267 | 877 | நீஷாபூர் |
| 16 | அபூ பவாரிஸ் ஷாஹ் பின் ஷுஜா கிர்மானீ ... | கிர்மான் | 270 | 883 | கிர்மான் |
| 17 | அபூ ஸயீத் அஹ்மத் பின் ஈஸா கர்ராஸ் ... | பக்தாத் | 277 | 890 | பக்தாத் |
| 18 | அபூ முஹம்மத் ஸஹல் பின் அப்துல்லாஹ் தஸ்தரீ ... | தஸ்தர் | 283 | 896 | தஸ்தர் |
| 19 | அபுல் ஹஸன் அஹ்மத் பின் முஹம்மத் நூரி ... | பக்தாத் | 295 | 907 | பக்தாத் |
| 20 | அபுல் காஸிம் ஜுனைத் பின் முஹம்மத் கவாரீரீ ... | நிஹாவந்த் | 297 | 909 | பக்தாத் |
| 21 | அபூ உஸ்மான் ஸயீத் பின் இஸ்மாயீல் ஹய்ரீ ... | ரேய் | 297 | 909 | நீஷாபூர் |
| 22 | அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் இஸ்மாயீல் மக்ரிபீ ... | ரேய் | 299 | 911 | ஸீனா |
| 23 | அபூ முஹம்மத் ருவீம் பின் அஹ்மத் ... | பக்தாத் | 303 | 915 | பக்தாத் |
| 24 | அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் அலீ தரந்தி .... | தரந்த் | 303 | 915 | தரந்த் |
| 25 | அபூ ஹம்ஜா முஹம்மத் பின் இப்ராஹீம் பக்தாதீ ... | பக்தாத் | 289 | 901 | பக்தாத் |
| 26 | அபூ ஹம்ஜா குராஸானீ ... | நீஷாபூர் | 290 | 902 | நீஷாபூர் |
| 27 | மும்ஷாத் அலீ தீனூரி ... | தீனூர் | 299 | 911 | தீனூர் |
| 28 | அபுல் அப்பாஸ் அஹ்மத் பின் அதா ... | பக்தாத் | 309 | 921 | பக்தாத் |

| எண் | பெயர் | பிறந்த நாடு | மரணம் ஹி | மரணம் இ. பி. | மரணமான இடம் |
|---|---|---|---|---|---|
| 29 | அபூ முஹம்மத் அஹ்மத் ஜுரய்ரீ ... | ஜுரய்ர் | 312 | 924 | காமத் |
| 30 | அபூ இஸ்ஹாக் இப்ராஹீம் பின் தாவூத் ரகீ ... | ஸிரியா | 326 | 937 | * |
| 31 | அபுல் முகீஸ் ஹுஸய்ன் பின் மன்ஸூர் ஹல்லாஜ் பய்ஸாவீ ... | பய்ஸா | * | * | பக்தாத் |
| 32 | அபூ பக்ர் முஹம்மத் பின் மூஸா வாஸிதீ ... | பர்கானா | 320 | 932 | மர்வ் |
| 33 | அபூ அலி முஹம்மத் பின் முஹம்மத் ரூத்பாரீ ... | பக்தாத் | 321 | 933 | எகிப்து |
| 34 | அபூ பக்ர முஹம்மத் பின் அலி பின் ஜஅபர் பக்தாதீ கதானீ | கதான் | 322 | 934 | மக்கா |
| 35 | அபூ முஹம்மத் அப்துல்வாஹ்ற பின் முஹம்மத் மர்தஅஷ் நீஷாபூரி ... | நீஷாபூர் | 328 | 939 | பக்தாத் |
| 36 | அபூ யஅகூப் இஸ்ஹாக் பின் முஹம்மத் நஹ்ர்ஜூரி ... | நஹ்ர்ஜூர் | 330 | 941 | மக்கா |
| 37 | அபூ பக்ர் ஜஅபர் பின் யூனுஸ் ஷிப்லி ... | மிஸ்ர் | 334 | 945 | பக்தாத் |
| 38 | அபுல் கைர் ஹம்மாத் தய்னதி | தய்னத் (எகிப்து) | 340 | 951 | |
| 39 | அபுல் அப்பாஸ் காஸிம் பின் காஸிம் மஹ்தீ ஸய்யாரீ ... | மர்வ் | 342 | 953 | மர்வ் |
| 40 | அபூ முஹம்மத் ஜஅபர் பின் முஹம்மத் நஸிர் கல்தீ ... | பக்தாத் | 348 | 959 | பக்தாத் |
| 41 | காஜா அபூ அஹ்மத் அப்தால் சிஷ்தீ ... | சிஷ்த் | 355 | 965 | சிஷ்த் |

# எமது வெளியீடுகள்

*எல்லா ஹிக்கின் பாதம்—சுதேசமித்திரன் ரெயில்வே ஸ்டால்களிலும் கிடைக்கும்.*

*இஸ்லாமிய வரலாறு* 1

## முஹம்மத் (ஸல்)

*(மூன்றும் பதிப்பு)*

இறைவனின் திருத்தூதராக, அகிலங்களுக்கெல்லாம் அருள் கொடையாக, அவதரித்த அண்ணல் முஹம்மத் நபி அவர்களின் வரலாறு பல தலைப்புகளில் இன்பத் தமிழில் ஆதாரபூர்வமாக தெளிவாக, சுவையாக விவரிக்கப்பட்டுள்ளது. ஆங்காங்கே நிறையுடைய திருமறையின் பொருள் செறிந்த தூய வசனங்களும் பொருத்தமாகக் கையாளப்பட்டுள்ளன.

நபி பெருமானாரின் அறுபத்து மூன்றாண்டு வாழ்க்கை நிகழ்ச்சிகள் தனியாக ஓர் அட்டவணையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பெருமானார் காலத்திய அரேபியா தரைப்படம் வர்ணத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமும் இறை தூதரும் உலகினுக்கு அளித்த பேறுகள், பெருமானாரின் அறவுரைகள், இஸ்லாம் பரவியதற்குக் காரணங்கள் போன்ற பதினெறு அநுபந்தங்கள் இடம் பெற்றுள்ளன.

பரிசுப் பதிப்பு ரூ. 3 மலிவுப் பதிப்பு ரூ. 2

*வை: யிதிறு*

## அபூ பக்ர் ஸித்தீக் (ரலி)

அன்பே உருவாக, அறநெறித் தோன்றலாக, அறிவும் ஆற்றலும் உடையோராக, வள்ளலாக, நபிநாயகமவர்களின் தனிசிறந்த தோழராக, அரும்பெரும் தியாகியாக வாழ்வு நடத்திய அண்ணல் அபூ பக்ர் (ரலி) அவர்களது சரிதை.

ஆண்டவனுக்காகவும், அவனது திருத்தூதரான நபி பெருமானாரவர்களுக்காகவுமே இவ்வுலக வாழ்க்கையை நடத்திய ஸையிதினா அபூ பக்ர் (ரலி) அவர்களைப்பற்றி அறிதல் அவசியமாகும்.

"பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்ற குறளுக்கு விரிவுரையே இப்பெரியாரின் வாழ்க்கையாகும்

விலை ரூ. 0—14—0

ஸையிதினா

## உமர் பின் கத்தாப் (ரலி)

இஸ்லாமிய சரிதையிலே, இரண்டாம் கலீபா என்று இடம் பெற்றவர். மேற்கில் மத்தியதரைக் கடலிலிருந்து, கிழக்கில் இந்தியா வரையிலும், தெற்கில் ஸூதான் நாட்டிலிருந்து வடக்கில் கஸ்பியன் கடல் வரையிலும் பரந்திருந்த இஸ்லாமிய குடியரசின் தலைவர். அரண்மனையும் அரியணையும் இல்லாதவர். "எல்லோருக்கும் பணி செய்வோனே மக்களது தலைவன்" என்று கூறித் தாமும் அவ்வாறே செயலாற்றியவர்.

பூர்வ காலமுதல் அரசியலே அறியாத— நடைமுறையில் தெரியாத—அரேபியாவிலே, இவர் அரியதோர் ஆற்றலுடன் புதியதோர் அரசியலைச் சமைத்தார். மக்கள் ஆட்சி அமைத்து, அந்த மக்கள் இறைவனுடைய கட்டளைகளைப் பின்பற்றி நடக்கிருர்களா என்று மேற்பார்வை செய்தார்.

இந்த கலீபாவின் காலத்திய இஸ்லாமிய அரசாங்கத் தரைப் படமும், பைத்துல் முகத்தஸ் (எருஸலம்) நகரிலுள்ள உமர் பள்ளிவாசலின் படமும் சேர்க்கப்பட்டுள்ளன..

வாழ்க்கை நிகழ்ச்சிகளின் தனி அட்டவணை ஹிஜ்ரி, கிறிஸ்தவ ஆண்டுகளுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

விலை ரூ. 1—8—0

ஸையிதினா

## உஸ்மான் பின் அப்பான் (ரலி)

முஸ்லீம்களது வரலாற்றிலே, மூன்றும் கலீபா என்று இடம் பெற்றவர். இவர் இஸ்லாமியக் குடியரசின் தலைவராக இருக்கையிலே, ஒரு யூதன் தலைமையில் கலகங்களும், சதிகளும் நடந்து முஸ்லீம்களுக்கிடையில் பிளவுகள் தோன்றின. சாந்தமே உருவாக அமைந்த இந்தப் பெரியார் அத்தகைய பிளவுகள் ஏற்படாமல் முயன்ருர். இரத்தஞ் சிந்தலைத் தடுத்தார். இந்த முயற்சியில் தமது உயிரையும் அர்ப்பணித்தார்.

விலை ரூ. 1—8—0

ஸையிதினா

## அலீ பின் அபூ தாலிப் (ரலி)

வீரத்திற்கும் ஞானத்திற்கும் உறைவிடமாக விளங்கிய இவர் இஸ்லாமிய சரித்திரத்தில் நான்காம் கலீபாவாக இடம் பெற்றவர். முஸ்லீம் மெய்ஞ்ஞானிகளுக்கு வழிகாட்டியாக அமைந்தவர். இவரது நீதிமன்றம் சரித்திரப் புகழ்வாய்ந்தது. நேர்வழி நடந்த குலபாயே ராஷிதின் என்ற நான்கு கலீபாக்களில் இறுதியானவர். உண்மையான இஸ்லாமியக் குடியரசும், ஜனநாயகமும் இந்த நால்வர் காலத்தில் தொடர்ச்சியாக நடந்தது.

விலை ரூ. 1—8—0

ஹஸ்ரத்

## பிலால் (ரலி)

எம்பெருமானர் (ஸல்) அவர்களது காலத்திலே முஸ்லிம்களைத் 'தொழுகைக்கு வாருங்கள்' என்று அழைத்த பெரியாரின் வாழ்க்கை வரலாறு. "ஸையிதினா"—எமது தலைவர்—என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) போன்ற கலீபாக்களால் அழைக்கப்பட்டவர்.

எம்பிரானுடன் வசித்து, எம்பிரானைக் கண்ணாரக் கண்டு களித்து, எம்பிரானுடைய சொல்லையும் செயலையும் கூர்ந்து கவனித்து, அவற்றின்படி நடந்தவர் ஹஸ்ரத் பிலால்.

பொறுமை, மனஉறுதி, இறைபக்தி முதலியவற்றிற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

இஸ்லாத்திலே முதல் முஅத்தின் (தொழுகைக்கு அழைப்பவர்) என்ற பாக்கியம் பெற்றவர். எப்பொழுதும் பெருமானாரின் பணிவிடை செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பவர். இவரது வாழ்க்கை இறைபக்தருக்குச் சிறந்த தூண்டுகோலாகும்.

விலை ரூ. 0—10—0

*ஹஸ்ரத்*

## காலித் பின் வலீத் (ரலி)

அன்பு மிகுந்து, அறம் வளர்ந்து, அனுதாபம் சிறந்து, தியாகம் நிறைந்து, இஸ்லாமிய பணி விரிந்து, வீரம் செறிந்து காணப்படும் வாழ்க்கை வரலாறு. இஸ்லாத்துக்காகவே வாழ்ந்து இஸ்லாத்துக்காகவே வீழ்ந்த பெரியார் காலித்.

மாசற்ற உள்ளத்தாலும், மாட்சிமிக்க குணத்தாலும் மக்கள் உள்ளங்களிலே அன்றும், இன்றும், என்றும், நின்று நிலவத்தக்க பொன்றுப் புகழை எய்தி, சொற்றிறத்தால், வெற்றிப் பெருக்கால், பெற்றிமிகப் பெற்று, கற்றோரும் மற்றோரும் வாயாரப் போற்றும் இந்தப் புனிதருடைய வாழ்க்கையானது சரித்திராசிரியர்களுக்கும் தளபதிகளுக்கும் விளங்காப் புதிர்.

இந்த உலகப் பற்றை விட்டுவிட்டு, இறையருள் பெறுதலே வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை இவரது ஜீவிதம் நமக்குக் கற்பிக்கின்றது.

விலை ரூ. 1—8—0

*இமாம்*

# அபூ ஹனீபா (ரஹ்)

"அறிவுக் களஞ்சியம்" எனப் பெயர்பெற்ற இமாம் அபூ ஹனீபாவின் வாழ்க்கை வரலாறு. அந்த மகானுடைய பரந்த அறிவும், விரிந்த நோக்கும், நிறைந்த பண்புகளும் நல்ல முறையில் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

மார்க்க, சமுதாய, பொருளாதார, அரசியல், குடும்ப வாழ்க்கைகளுக்கு வழிகாட்டியாகவும், இறை பக்தர்களுக்கோர் ஒளி விளக்காகவும், விளங்கும் உத்தமப் பெரியாரின் வாழ்க்கை வரலாறு.

இறைநேசம், பொறுமை, வீரம், தியாகம். விடாமுயற்சி, அஞ்சாமை முதலான பெருங்குணங்களுக்கு உதாரண புருஷர்.

விலை ரூ. 0—10—0

*இமாம்*

# கஸ்ஸாலி (ரஹ்)

(இரண்டாம் பதிப்பு)

எண்ணூறு ஆண்டுகளாகத் தத்துவஞான உலகின் பேரரசராய் விளங்கும் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களை,

"தத்துவ ஞானிகளின் தந்தை"
"நூற்கள் பல இயற்றிய நுண்ணறிவாளர்"
"மெய்ஞ்ஞானக் கடல்"

என்று உலகம் இன்றும் போற்றுகிறது. இப்பெரியாரின் நூற்கள் உலகில் பல மொழிகளில் எழுதப்பட்டிருக்கின்றன. ஐக்கிய நாட்டுச் சபையின் கலாச்சார கல்வித்துறையினரால் அன்னாரின் நூல்கள் இன்று பதிப்பிக்கப்பட்டு வருகின்றன. பகுத்தறிவின் அவசியத்தை விளக்கி, ஆனால் ஓர் எல்லைக்கப்பால் பகுத்தறிவு பயன்தராது, எனவே, அகக் கண்ணால் பார்த்து அருள் பெறவேண்டும் என்கிறார் இமாம் கஸ்ஸாலி.

இமாமவர்களின் அரசியல் கொள்கை, கல்வித்துறை, துறவறம், நூல்கள், சேவைகள், போதனைகள், இறைவன் நேசம், முதலிய பல தலைப்புகள் இந்நூலுக்குச் சிறப்பாக அமைந்துள்ளன. வாழ்க்கையை விளக்கும் தரைப்படமும் அரபிப் பதங்களின் பொருள் அட்டவணையும் இணைக்கப்பட்டுள்ளன.

விலை ரூ. 1—0—0

*கலீபா*

# உத்தமர் உமர்

## பின் அப்துல் அஜிஸ் (ரஹ்)

## (இரண்டாம் பதிப்பு)

இஸ்லாத்தின் இரண்டாம் கலிபா ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) உடைய பேரர். நெறி தவறி உல்லாச வாழ்வில் காலங்கழித்த மக்களிடையே நிறையுடைய வாழ்வு வாழ்ந்தவர். அஹிம்சா மூர்த்தி. சாந்த சொரூபி. பெரிய பக்திமான். ஞ. ஞசிரியர். இனவேற்றுமை, மதவேற்றுமை, முதலியனவற்றை நீக்கி குர்ஆன் காட்டிய சமரச நோக்குடன் ஆட்சி செய்தார். இறைவனுடைய படைப்பிலே அரசன்—ஆண்டி என்ற பாகுபாடு கிடையாது என்பதைத் தமது வாழ்க்கையில் நடத்திக் காட்டினூர்.

வாள் வலிமையில்லாமல், பலாத்காரமில்லாமல், ராணுவ சக்தியில்லாமல், மேற்கில் அத்லான்திக் மகாசமுத்திரத்திலிருந்து கிழக்கில் சீனு வரையில் அமைதி நிலவிய ஆட்சி புரிந்தார்.

இஸ்லாமிய அரசியலைப்பற்றி சிலரிடம் நிலவும் தப்பபிப்பிராயங்களுக்கு உண்மையில் முஸ்லிம் அரசியலில் இடமில்லை என்பதை இவர் வாழ்க்கை தெள்ளத் தெளியக் காட்டுகிறது.

விலை ரூ. 0—12—0

*ஸுல்தான்*

# ஸலாஹுத்தீன் (அய்யூபி)

இஸ்லாத்திற்காகவே வாழ்ந்து இஸ்லாத்திற்காக உயிர் விட்ட மாண்புமிக்க மாவேந்தரின் வாழ்க்கைச் சரிதை. அறப்

போர்த் தளபதியாக, மாற்றாரும் போற்றும் மாவீரராக, பொன்றாப் புகழ்பெற்றவர். சீரிய நற்பண்புகள் நிறைந்த சத்தியசீலரின் நேர்மையை பல சம்பவங்களால் சுவைபடச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

விலை ரூ. 1—0—0

*தளபதி*

# தாரிக் (பின் ஜியாத்)

ஐரோப்பாவின் இரண்டில் ஒருபாகம் முஸ்லிம்களால் ஆளப் பட்டது என்றால் உங்களுக்கு அதிசயமாகத் தோன்றவில்லையா ?

முஸ்லிம்கள் தென்மேற்கு ஐரோப்பாவில் சுமார் எண்ணூறு ஆண்டுகளும், கிழக்கு ஐரோப்பாவில் சுமார் ஐநூறு ஆண்டு களும் ஆட்சி செய்தார்கள். அக்கால அநாகரிக ஐரோப்பிய ருக்குக் கல்வியும் கலாச்சாரமும் கற்பித்தார்கள். அந்த ஆட்சியின் முதல் படலத்தை ஆரம்பித்தவர் தளபதி தாரிக் பின் ஜியாத் என்பவர். இவரே முதன்முதலாக ஆப்பிரிக்காவிலிருந்து ஸ்பெயின் நாட்டில் பிரவேசித்து, இஸ்லாமியக் கொடியை ஐரோப்பாவில் நாட்டியவர்.

வீரத்திலே பிறந்து வீரப் பூஞ்சோலையிலே வளர்ந்தவர். வீரப் பண்ணையிலே வளம்பெற்ற தளபதி தாரிக் ஐரோப்பாவில் இறங்கியவுடன் தமது கப்பல்களை எரித்துவிட்டார்! "வெல் வோம் அல்லது மடிவோம்; புறமுதுகு காட்டி நாடு திரும்ப மாட்டோம்!" என்றார். திண்ணிய நெஞ்சுடைய தளபதி தாரிக் எண்ணிய எண்ணப்படியே செய்துமுடித்தார். உலக வீர வரலாற்றில் இடம் பெற்றார்.

விலை ரூ. 0—10—0

ஹஸ்ரத்

# ராபியா பஸ்ரி (ரஹ்)

பெண்மையின் பெருமையை விளக்கும் நூல் உலகில் எத்தனையோ அவுலியாக்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்களில் பெண்களும் உண்டு. ஹஸ்ரத் ராபியா பஸ்ரி (ரஹ்) என்பார் துறவியாக வாழ்க்கை நடத்தி, இறைவனுடைய நேசத்தைப் பெறுவதிற்காகவே உலகில் வாழ்ந்தார். இவர் இஸ்லாமிய சரித்திர ஆரம்பகால ஸூபிகளது வரிசையைச் சேர்ந்தவர்.

வருங்கால மக்களின் தாய்மார்களுக்கு இந்த வாழ்க்கையானது இறை நேச நெறி காட்டும் என்பது உறுதி.

விலை ரூ. 0—10—0

# இஸ்லாம் காட்டிய அரசியல்

(இரண்டாம் பதிப்பு)

இதில் திரு குர்ஆன் வகுத்த இஸ்லாமிய அரசாங்கத் திட்டமும், அதைப் பின்பற்றி பெருமானாரவர்களும், அப்பால், முதல் நான்கு கலீபாக்களும் எவ்வாறு நேர்மையுடன் அரசியல் நடத்தினார்கள் என்பதும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றது.

இஸ்லாமிய ஆட்சியில், 'இறைவன் ஆட்சி' என்பது விளக்கி, அது தற்கால ஓட்டுகள் மூலமாகத் தேர்தல் பெற்ற பிரதிநிதிகள் கூடிய பார்லிமெண்ட் முறையோ அல்லது சர்வாதிகரர முறையோ ஆகாது என்றும், விவரிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய மத்திய ஸ்தாபனம் எவ்வாறு இருந்தது? இனி எவ்வாறு இருத்தல் வேண்டும்? என்றும் கூறப்பட்டுள்ளது. இறுதியில் ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலியவர்களது விளக்கவுரை இடம்பெறுகின்றது.

விலை ரூ. 0—12—0

அல்லாமா இக்பாலின்

# முறையீடும் மறுமொழியும்

(மூன்றாம் பதிப்பு)

இது அல்லாமா முஹம்மத் இக்பால் உர்து மொழியில் எழுதிய,

" ஷிக்வா—ஜவாபே ஷிக்வா "

என்ற உர்து கவிதையின் தமிழாக்கம்.

முஸ்லிமே! சத்திய இஸ்லாத்தின் கப்பலை இக்காலத்திலே நடத்துதல் உன் பொறுப்பு!

நவயுகம் இருண்ட இரவைப் போன்றது! நீர் அதன் துருவ நட்சத்திரமாய் அமைந்துள்ளாய்!

விலை ரூ. 0—10—0

ஹஸ்ரத்

# ஸல்மான் பார்ஸி (ரலி)

இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்ட முதல் ஈரானியரது வாழ்க்கை வரலாறு.

பாரசீக ராஜ்யத்தில் பிறந்து, அக்கினி வணக்கத்தில் ஈடுபட்ட பக்தர். கிறிஸ்துவ மதத்தை ஆராய்ந்தார். இறுதியாக மதீனா நகர் சேர்ந்து நபிநாதரிடம் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டார். எளிய வாழ்க்கையையும் இறை நேசத்தையும் மேற்கொண்டார். கவர்னர் பதவியில் இருந்த காலையிலும் ஏழையாகவே வாழ்க்கை நடத்தி இஸ்லாமியப் பிரசாரஞ்செய்து கொண்டிருந்தார். எம்பிரான் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்தார். இந்த அற்புதமான வாழ்க்கை மக்களுக்கோர் முன்மாதிரி.

விலை ரூ. 0—10—0

ஹஸ்ரத்

# மன்ஸூர் ஹல்லாஜ் (ரஹ்)

இஸ்லாமிய சரித்திர இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய பல ஸூபிகளில் ஒருவரான மன்ஸூர் ஹல்லாஜ் (ரஹ்) என்னும் பெரியாரின் சரிதை.

"அனல் ஹக்"

"நானே உண்மை—நானே இறைவன்"

என்று, பரவச நிலையில், வெளிப்படையாகக் கூறினார். இஸ்லாமிய ஷரீஅத்திற்கு விரோதமான இச்செயல் அவரைத் தூக்குமேடைக்குக் கொண்டு சென்றது.

இந்த ஆச்சரிய புருஷரின் ஜீவிதம் ஒவ்வொருவரும் வாசித்து, இவர் எழுப்பிய குரலின் இரகசியத்தை அறிவது அவசியமாகும்.

விலை ரூ. 1—0—0

வெளிச்சம் பதிப்பகம்
34, இஸ்லாமியபுரம்
தென்னூர், திருச்சிராப்பள்ளி.

113
2-79

# வளர்மதி பதிப்பக நூல்கள்

| | | | ரூ. பைசா |
|---|---|---|---|
| 1. | முஹம்மத் (ஸல்) | | |
| | (மூன்றாம் பதிப்பு) | பரிசுப் பதிப்பு | 3 — 00 |
| | | மலிவுப் பதிப்பு | 2 — 00 |
| 2. | ஹஸ்ரத் அபூ பக்ர் | ரலி | 0 — 87 |
| 3. | ,, உமர் | ,, | 1 — 50 |
| 4. | ,, உஸ்மான் | ,, | 1 — 50 |
| 5. | ,, அலீ | ,, | 1 — 50 |
| 6. | ,, காலித் பின் வலீத் | ,, | 1 — 50 |
| 7. | ,, ஸல்மான் பார்ஸி | ,, | 00— 75 |
| 8. | ,, பிலால் | ,, | 0 — 62 |
| 9. | ,, ராபியா பஸ்ரீ (ரஹ்) | | 0 — 62 |
| 10. | தளபதி தாரிக் | | 0 — 62 |
| 11. | உத்தமர் உமர் | | 00 — 75 |
| 12. | இமாம் அபூ ஹனீபா | | 0 — 62 |
| 13. | இமாம் கஸ்ஸாலீ | | 1 — 00 |
| 14. | மன்ஸூர் ஹல்லாஜ் | | 1 — 00 |
| 15. | இக்பாலின் முறையீடு | | 0 — 75 |
| 16. | உலகம் போற்றும் உத்தம நபி | | 1 — 50 |
| 17. | இஸ்லாமிய சரித்திரக் கதைகள் | | 0 — 50 |

இம்பீரியல் அச்சகம், பெரியகம்மாளத்தெரு. திருச்சிராப்பள்ளி—57.